*21*

# பன்னிருவரின் ஊழியம்

## (10:1-23)

*முந்திய அதிகாரத்தின் முடிவுரையானது 10ம் அதிகாரத்திற்கு ஒரு முகவுரையாகவும் செயல்படுகிறது: “ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்” (9:38). யூத மக்களுக்கு மாத்திரமான வரையறைக்கு உட்பட்ட ஊழியத்திற்கு இயேசு பன்னிருவரை அனுப்பினார். அவர்கள், இராஜ்யம் சமீபித்து இருப்பதைப் பற்றிப் பிரசங்கிக்கவும், நோயாளிகளைக் குணமாக்குதல் மற்றும் பிசாசுகளைத் துரத்துதல் ஆகியவற்றின் மூலம் தங்கள் செய்தியை செல்லத் தக்கதாகவும் வேண்டியிருந்தது. 10ம் அதிகாரத்தில் இயேசுவின் ஊழியம் என்பது, மத்தேயு சுவிசேஷ விபரத்தில் இரண்டாவது முதன்மை உரையாடலை கொண்டுள்ளது.*

*இந்த அதிகாரத்தில் இயேசுவின் அறிவுறுத்தல்கள், இஸ்ரவேல் நாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த வரையறைக்கு உட்பட்ட ஊழியத்தைக் கொண்டு முதன்மையாக மட்டுப்படுத்தப்பட்டன (10:5-15, 23). இருப்பினும், அவரது சில கட்டளைகள் இயல்பாகவே மிகவும் பொதுவானவையாக இருந்தன (10:18, 22, 26, 28, 32). இவைகள் சகல மக்களினங்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய கிறிஸ்துவின் நற்செய்தி பற்றி கட்டளையிடப்பட்ட பிரதான கட்டளையை முன்நோக்கிச் சுட்டிக் காண்பித்தன (28:18-20; மாற்கு 16:15, 16; லூக்கா 24:46, 47). இந்தக் கருத்தில், 10ம் அதிகாரம் பன்னிருவரின் ஊழியத்தையும், குறிப்பிட்ட அளவிற்கு சபையின் ஊழியத்தையும் எடுத்துரைக்கிறது.[1]*

*மத்தேயுவின் உயர்ந்த ஆர்வம், வரையறைக்கு உட்பட்ட ஊழியத்தின் மீது இருந்ததைக் காட்டிலும் அதிகமாக, இயேசுவின் அறிவுறுத்துதல்களின் மீது இருந்ததாகக் காணப்படுகிறது. சீஷர்கள் புறப்பட்டுச் சென்றது, அவர்களின் ஊழியம் மற்றும் அவர்களின் திரும்பி வருகை பற்றி உண்மையில் அறிக்கை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை (காண்க மாற்கு 6:12, 13, 30; லூக்கா 9:6, 10). இந்த உரையாடலுக்குப் பின்பு இயேசு “அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்” என்று மத்தேயு கூறினார் (11:1).[2]*

### *பன்னிருவரை வரவழைத்தல் (10:1-4)*

**[1]அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.**

**[2]அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான்,**
**[3]பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல் பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு,**
**[4]கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே.**

*__வசனம் 1.__ வாழ்வின் பல்வேறு வழிகளில் இருந்து திரளான எண்ணிக்கையில் சீஷர்களை **இயேசு** ஒன்றுகூட்டியிருந்தார். அவர்களுடன் அவர் நேரத்தைச் செலவிட்ட விஷயமானது, அவர்களின் நடக்கை மற்றும் நடத்தை ஆகியவற்றை உற்றுநோக்க அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. இந்தப் பெரிய குழுவில் இருந்து (காண்க லூக்கா 10:1) அவர் தமக்கு நெருக்கமான **சீஷர்கள்** வகையில் ஒரு சிறு குழுவைத் தேர்ந்தெடுத்தார். "சீஷன்" (mathētēs) என்ற வார்த்தை "கற்றுக்கொள்பவர்" அல்லது "பின்பற்றுபவர்" என்று அர்த்தப்படுகிறது. பன்னிருவரைத் தேர்ந்துகொள்ளுதல் மற்றும் நியமித்தல் ஆகியவை, மாற்கு 3:13-15 மற்றும் லூக்கா 6:12, 13 ஆகிய வசனப்பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன.*

*இந்த மனிதர்கள், அவர்களின் சொந்தத் திறன்கள், தகுதிகள் அல்லது உண்மைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அல்ல, ஆனால் கர்த்தருடைய இராஜரீக சித்தம் மற்றும் நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேர்ந்துகொள்ளப்பட்டனர். ஜெபத்தில் ஒரு இரவு முழுவதும் அவர் செலவிட்ட பின்பு அவர்கள் தேர்ந்துகொள்ளப்பட்டனர் (லூக்கா 6:12). மற்ற சந்தர்ப்பங்களிலும் அவர் இதே போன்று செய்திருக்கலாம் என்றாலும், இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார் என்று வேதவசனங்களில் இங்கு மாத்திரமே கூறப்பட்டுள்ளது. அந்த இரவை அவர் ஜெபத்திற்கு ஒப்புக்கொடுத்தது, இந்த முடிவை அவர் எவ்வளவு தீவிரமானதாகக் கருதினார் என்பதை நிச்சயமாக விவரிக்கிறது. இந்த மனிதர்கள் வெளிப்படையான குறைவுகள் கொண்டிருந்தனர்: இவர்கள் ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதல், தாழ்மை, விசுவாசம், ஒப்புக்கொடுத்தல் மற்றும் வல்லமை ஆகியவற்றில் குறைவுபட்டவர்களாக இருந்தனர்.*

*மத்தேயுவின் தற்போதய வசனப்பகுதி, பன்னிருவர் தேர்ந்துகொள்ளப்பட்டு நியமிக்கப்பட்டது பற்றியும் குறிக்கிறதா? **வரவழைத்து** (proskaleō) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வினைச்சொல், "விசேஷித்த பணிப்பொறுப்பு அல்லது அலுவலுக்கு அழைத்தல்" (காண்க நடபடிகள் 13:2; 16:10) அல்லது "ஒருவரை அழைத்தல்" என்று அர்த்தப்படக் கூடும்.[3] பிந்திய அர்த்தமானது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி உள்ளது மற்றும் இது இங்கு நோக்கங்கொண்ட அர்த்தமாக இருக்கலாம். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு - தாம் ஏற்கனவே தேர்ந்தெடுத்திருந்த - தமது சீஷர்களை, வரையறைக்குட்பட்ட ஊழியத்தில் அனுப்புவதற்காகத் தம்மிடம் அழைத்தார்.[4]*

*இயேசு, தேர்ந்துகொள்ளப்பட்ட **பன்னிரண்டு** சீஷர்களைக் கொண்டிருந்தார் என்ற உண்மை, மாபெரும் தனிச்சிறப்புள்ள*

விஷயமாக உள்ளது. மைக்கேல் J. வில்க்கின்ஸ் அவர்கள், "பன்னிரெண்டு என்பது தேவனுடைய திட்டத்தில் இரட்சிப்பின் வரலாற்றின் தொடர்ச்சியை அடையாளப்படுத்துகிறது" என்று நினைத்தார்.[5] பழைய ஏற்பாட்டில் பன்னிரெண்டு கோத்திரப்பிதாக்கள் (ஆதியாகமம் 35:22; 42:13, 32) இஸ்ரவேல் மக்களினத்தின் பன்னிரெண்டு கோத்திரங்களை (யாத்திராகமம் 24:4; 28:21) எழும்பச் செய்தனர். இயேசுவின் சீஷர்கள் (அப்போஸ்தலர்கள்), "இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள்" என்ற அவரது கூற்றில் (19:28), பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் இடையில் ஒரு தொடர்பு காணப்படுகிறது. மேலும் பரலோக நகரத்தின் தரிசனத்தில், அவர்களின் பெயர்கள் புதிய எருசலேமின் அஸ்திபாரக் கற்களில் பதிந்திருந்தன (வெளிப்படுத்தின விசேஷம் 21:14). இயேசுவின் சீஷர்கள், தேவனுடைய உண்மையான மக்களான புதிய எருசலேமை (சபையை) எழுப்புவார்கள் (ரோமர் 2:28, 29; 9:6-8; கலாத்தியர் 3:29; 6:16; பிலிப்பியர் 3:3; யாக்கோபு 1:1; 1 பேதுரு 1:1). சொல்லப்போனால் சபையார், "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" (எபேசியர் 2:20).

இந்தக் காலகட்டத்திற்கு முன்னர் இயேசு, உண்மையில் தனித்து ஊழியம் செய்திருந்தார். பன்னிருவரும் திரளான மக்கள் கூட்டமும் அவரைப் பின்பற்றினர் - ஆனால் அவர்கள் பங்கேற்பாளர்களாக அல்ல, உற்றுக் கவனிப்பவர்களாகவே பின்பற்றிவந்தனர். இந்த இடத்தில் இயேசு, **அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரம்** [அல்லது "வல்லமை"][6] **கொடுத்தார்.** இவ்விடத்தில் உள்ள மொழிநடையானது, இயேசுவின் ஊழியம் பற்றிய முந்தின விவரிப்புகளின் எச்சமாக உள்ளது (4:23; 9:35).

இது வரையறை செய்விக்கப்பட்ட ஊழியமாக இருந்தால், பன்னிருவரும் கொண்டிருந்த வல்லமையானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் இருந்து பின் ஒழிந்து போனதாக இருக்கலாம்: பிற்பாடு இயேசு பரலோகம் சென்ற பின்பு, அவர்கள் "பரிசுத்தஆவி [அவர்களிடத்தில்] வரும்போது [அவர்கள்] பெலனடைந்து" என்று அவர்களுக்கு இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (நடபடிகள் 1:8). இந்த வாக்குத்தத்தம் இரண்டு வரங்களை உள்ளடக்கி இருந்தது: முதலாவது, பரிசுத்த ஆவியானவர், மற்றும் இரண்டாவது, அவர்களின்மீது அவர் பொழியும் பெலன். இயேசு பரமேறியதற்குப் பின்வந்த பெந்தெகொஸ்தே நாளில் அவரது வாக்குத்தத்தம் நிறைவேறிற்று (நடபடிகள் 2:1-4). இந்த வல்லமை பற்றிய ஒரு விபரம், அவர்களுக்கு முன்பே அருளப்பட்டிருந்த வல்லமையின் பண்பில் இருந்து இதை வேறுபடுத்துகிறது: இம்முறை அவர்கள் மற்றவர்களுக்கு ஆவியானவரின் வரத்தைத் தரக்கூடிய வல்லமை கொண்டிருப்பார்கள் (நடபடிகள் 8:14-19).

**வசனங்கள் 2-4.** இயேசு **தமது அப்போஸ்தலர்களை அனுப்பும்முன் அவர்களின்** பெயர்களை மத்தேயு **பட்டியலிட்டார்.** லூக்கா சுவிசேஷத்தின்படி, இயேசு இந்த சீஷர்களை முன்னதாகத் தேர்ந்து எடுத்து "[அவர்களுக்கு] அப்போஸ்தலர்கள் என்று பேரிட்டார்" (லூக்கா 6:13). என்று

*மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை மத்தேயு சுவிசேஷத்தில் "அப்போஸ்தலர்" (apostolos) இங்கு ஒரு முறைமாத்திரமும், மாற்கு சுவிசேஷத்தில் ஒன்று அல்லது இரு முறையும் (மாற்கு [3:14][7]; 6:30), மற்றும் யோவான் சுவிசேஷத்தில் ஒருமுறையும் (யோவான் 13:16) காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை பெரும்பான்மையும், லூக்கா மற்றும் பவுல் ஆகியோரின் எழுத்துக்களில்தான் காணப்படுகிறது. "அப்போஸ்தலர்" என்ற வார்த்தை, "தேர்ந்து கொள்ளப்பட்டு அனுப்பப்பட்டவர்" என்று அர்த்தப்படுகிற apostellō என்ற வினைச்சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது. இது, தேர்ந்துகொள்ளப்பட்டு, கட்டளை தரப்பட்டு, தம்மை அனுப்பினவரின் சார்பாகச் செயல்படும் அதிகாரம் கொண்ட ஒரு நபரைக் குறிக்கிறது. பன்னிருவரும் "எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும்" இயேசுவுக்குச் சாட்சியாக இருக்கும்படி அவரது சொந்தத் தூதர்கள் ஆயினர் (நடபடிகள் 1:8). அவர்களை இயேசு "தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்" தேர்ந்து கொண்டார் என்று மாற்கு கூறினார் (மாற்கு 3:14).*

*இயேசுவின் அப்போஸ்தலராக இருப்பதற்குக் குறிப்பிட்ட தகுதிகள் தேவைப்பட்டன. உதாரணமாக, யூதாஸ் இழந்து போன அப்போஸ்தலப் பட்டத்திற்குத் தேர்ந்து கொள்ளப்படும் வேட்பாளரானவர்கள், "யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன்" என்ற தகுதி பெற்று இருக்க வேண்டியிருந்தது (நடபடிகள் 1:21, 22). இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அப்போஸ்தலர்கள் அவரைக் கண்டிருக்கவேண்டும் (1 கொரிந்தியர் 9:1) என்றும் அவர்கள் கர்த்தரால் தேர்ந்துகொள்ளப் பட்டனர் (எபேசியர் 4:11) என்றும் மற்ற வேதவசனப்பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன.[8]*

*புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலர்களின் பெயர்கள் கொண்ட மேலும் மூன்று பட்டியல்கள் தரப்பட்டுள்ளன (மாற்கு 3:16-19; லூக்கா 6:14-16; நடபடிகள் 1:13). நான்கு பட்டியல்களும் ஒப்பிடப்படுகையில், பெயர்களில் கவனிக்கத் தக்க வேறுபாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. இந்த வேறுபாடுகள், மக்கள் அடிக்கடி ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களைக் கொண்டிருந்தனர் என்பதை உணர்ந்தறிதல் மூலம் சுலபமாக விளக்கப்படலாம். பட்டியல்களில் பெயர்களின் வரிசை முறைமையும் சற்றே வேறுபடுகிறது.*

*எல்லாப் பட்டியல்களிலும் **பேதுரு** என்று இயேசு பெயரிட்ட **சீமோன்** என்பவர் **முந்தினவராக** இருக்கிறார். சுவிசேஷங்களிலும் நடபடிகளின் தொடக்க அதிகாரங்களிலும், அவரே அப்போஸ்தலர்கள் யாவரையும் நடத்தியவராக நின்றார் என்பது தெளிவாகிறது. மத்தேயுவின் பட்டியலில், பேதுருவைத் தொடர்ந்து **அவன் சகோதரன் அந்திரேயா** என்பவர் குறிப்பிடப்படுகிறார். இம்மனிதர்கள் தங்கள் மீன்படி வலைகளைப் பழுதுநீக்கிக் கொண்டிருந்தபோது, அவர்களை அழைத்த நிகழ்ச்சி இந்த சுவிசேஷத்தின் முற்பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது (காண்க 4:18-20ன் மீதான விளக்கங்கள்). அடுத்து, **செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன்***

**சகோதரன் யோவான்** ஆகியோரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. இம்மனிதர்களுக்கு இயேசு, "இடிமுழக்கமக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற" பட்டப் பெயர் கொடுத்திருந்தார் (மாற்கு 3:17). இவர்களை அழைத்த நிகழ்வும் மத்தேயு சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது (காண்க 4:21, 22 மீதான விளக்கங்கள்). பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர், கிறிஸ்துவை நெருங்கிப் பின்பற்றினர்களாக இருந்தனர் என்பது தெளிவு. இந்த மூவரும் "உள்வட்டத்தினர்" என்று பெயரிடப்பட்டிருந்தனர், ஏனெனில் யவீருவின் மகள் உயிரோடு எழுப்பட்டது (மாற்கு 5:37), மறுரூபமானது (17:1) மற்றும் கெத்செமெனே தோட்டம் (26:37) ஆகியவற்றில் இயேசுவுடன் இருக்கும் சிலாக்கியத்தை இவர்கள் மாத்திரமே கொண்டிருந்தனர்.

யோவான் சுவிசேஷத்தில் **பிலிப்பு** என்பவர் பல முறை குறிப்பிடுகிறார் (யோவான் 1:44-46; 6:5-7; 12:20-22; 14:8). பேதுரு மற்றும் யோவான் ஆகியோரைப் போன்றே இருவரும் பெத்சாயிதா என்ற ஊரைச் சேர்ந்தவராக இருந்தார் (யோவான் 1:44). இவரே நத்தானியேலை இயேசுவிடம் கூட்டிக் கொண்ட வந்தவரும் ஆவார் (யோவான் 1:45, 46) அடுத்ததாக **பற்தொலொமேயு** வருவதால் அவர் நத்தானியேல் போன்ற அதே நபராகத்தான் இருக்கிறார் என்று சிலர் நம்புகின்றனர் (யோவான் 1:45; 21:2). "பற்தொலொமேயு" என்ற பெயர், அவர் "தொலொமேயு" என்ற பெயர்கொண்ட மனிதரின் மகன் என்ற வகையில் அடையாளப்படுத்தி இருக்கலாம்.[9] **தோமாவும்கூட** "திதிமு" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 11:16; 20:24; 21:2); "தோமா" என்பது அரமாயிக் மொழிப்பெயரில் இருந்து வருகிறது, "திதிமு" என்பது அதற்குச் சமானமான கிரேக்கச் சொல்லாக உள்ளது; இவ்விரு பெயர்களுமே "இரட்டை" என்று அர்த்தப்படுகின்றன. இவ்விரு பெயர்களுமே, இவர் தம்முடன் பிறந்த இரட்டையர் ஒருவரைக் கொண்டிருந்தார் என்று சிலர் யூகிக்கும்படி வழிநடத்தியுள்ளன. **ஆயக்காரனாகிய மத்தேயு,** "லேவி" என்றும் அறியப்பட்டிருந்தார் (மாற்கு 2:14), இவர் தமது ஆயத்துறையில் இருக்கையில், சீஷராகும்படி இயேசுவினால் அழைக்கப்பட்டார் (காண்க 9:9ன் மீதான விளக்கங்கள்).

**யாக்கோபு, அல்பேயுவின் குமாரன்** என்று குறிப்பிடப்பட்டார். இது ஒருவேளை யோவானின் சகோதரரும் செபதேயுவின் குமாரருமான, யாக்கோபு என்ற அவரது பிரசித்திபெற்ற எதிர்த்துணையாளியிடமிருந்து அவரை வித்தியாசப்படுத்துவதற்காகக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். இவர் "சின்ன யாக்கோபு" என்று அழைக்கப்பட்ட (மாற்கு 15:40) அதே மனிதராக இருந்திருக்கலாம். **ததேயு** என்பவர் அப்போஸ்தலர்களின் பிற பட்டியல்களில் (லூக்கா 6:16; நடபடிகள் 1:13) "யாக்கோபின் சகோதரனாகிய யூதா" என்று அழைக்கப்பட்ட அதே மனிதராக இருந்தார். ஒருவேளை "ததேயு" என்பது அவரை யூதாஸ்காரியோத்தாக நினைத்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது என்பதற்காக மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரால் பயன்படுத்தப்பட்ட பெயராக இருக்கலாம்; ஒரு இடத்தில் இவரை யோவான், "ஸ்காரியோத்தல்லாத யூதா" என்று குறிப்பிட்டார் (யோவான் 14:22). சில பழைய கையெழுத்துப் பிரதிகளில், "ததேயு" (10:3; மாற்கு 3:18) என்பதற்குப் பதிலாக "லெபேயு" என்றுள்ளது. **செலோத்தே என்னப்பட்ட சீமோன்**

*இவ்வசனப்பகுதியில் கானானியனாகிய சீமோன் என்று மிகவும் நேர்மறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஜேக் P. லூயிஸ் அவர்கள், " 'கானானியன்' என்பது, வைராக்கியமாயிருத்தல்" என்று அர்த்தப்படுகிற kana, என்ற எபிரெய வார்த்தையில் இருந்து தரவழைக்கப்படுகிறது என்று விளக்கப்படுத்தினார்.[10] இவரைப் பற்றி விவரிப்பதற்கு லூக்கா, "செலோத்தே" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள zēlōtēs கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார் (லூக்கா 6:15; நடபடிகள் 1:13).*

**யூதாஸ்காரியோத்து** என்ற பெயர், இது உட்படுத்தப்படாத நடபடிகள் 1:13ஐத் தவிர, மற்ற ஒவ்வொரு பட்டியலிலும் கடைசியாகக் காணப்படுகிறது. அவருக்குப் பதிலாக மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பதிவு செய்துள்ள நடபடிகள் 1:25, 26ல் அவர் இயேசுவைக் காட்டிக்கொடுத்தது குறிப்பிடப்பட்டுள்ளது. "ஸ்காரியோத்" என்ற வார்த்தை யூதாவில் அமைந்திருந்த ஒரு நகரான "கிரீயோத்தைச் சேர்ந்த மனிதர்" என்று அர்த்தப்படலாம் (யோசுவா 15:25).[11] அது உண்மையாக இருந்தால், யூதாஸ் ஒருவர் மாத்திரமே கலிலேயாவில் இருந்து வந்திராத ஒரே அப்போஸ்தலராக இருந்தார் என்றாகிறது. இவ்வார்த்தையின் மற்ற விளக்கங்கள் பின்வரும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன: "சதிக்கொலையாளி," "காட்டிக்கொடுப்பவர்," "சிவந்தநிறமுள்ளவர்," "செம்முடித்தலையர்," "சிகப்புச் சாயம் பூசிக்கொள்பவர்" மற்றும் "தோல் பையைச் சுமப்பவர்."[12] பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள். பல, இவரது தந்தையை "சீமோன் ஸ்காரியோத்" என்று குறிப்பிடுகின்றன (யோவான் 6:71). யூதாஸ் ஒரு திருடராயிருந்தார் (யோவான் 12:6) இவர் கர்த்தரைக் **காட்டிக்கொடுத்தார்**. ஒரு சந்தர்ப்பத்தில் இவரைப் பற்றி இயேசு, "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று கூறினார் (யோவான் 6:70, 71).

இந்தப் பன்னிரண்டு மனிதர்களும் பல்வேறு பின்னனிகளில் இருந்து வந்தபோதிலும், இவர்களை இயேசு தேர்ந்துகொண்டார். இவர்கள் பொதுவானவையாக அதிகமானவற்றைக் கொண்டிருந்தபோதிலும், மாறுபட்ட உணர்வுக்கூறுகளையும் மனநிலைகளையும் கொண்டிருந்தனர். பேதுரு அடிக்கடி, தாம் நினைக்கும் முன்பே பேசியவராக, ஆர்வமிக்க வகையில் எதிலும் நன்மையே காண்பவராக இருந்தார் (14:28; 26:33, 35). தோமா தமக்குப் போதிக்கப்பட்டவற்றை ஏற்றுக்கொள்ளும் முன்பு, அதற்கான நிரூபணத்தை விரும்பியவராக, எதிலும் தீயவற்றையே காண்பவராக (சிலர் இதை நடைமுறைக் கோட்பாடு என்கின்றனர்) இருந்தார் (யோவான் 11:16; 20:24, 25). செலோத்தே என்னப்பட்ட சீமோன், ரோமர்களுக்கும், அவர்களின் பொம்மை அரசர்களுக்கும், ஏரோதுகளுக்கும், வெறுக்கப்பட்ட ஆயக்காரர்களுக்கும் எதிராக வாக்குறுதி எடுத்துக்கொண்ட விரோதியாக இருந்தார். இதற்கு நேரெதிராகப் பிற்பாடு அவர், ஆயக்காரராக இருந்த மத்தேயுவின் சக அப்போஸ்தலர் ஆனார். பல்வேறு தனிநபர்களை எடுத்து அவர்களை ஐக்கியப்பட்ட சுவிசேஷ ஊழியப்படையாக உருவாக்க முடிந்த பண்பில் இயேசுவின் மாபெரும் தன்மை காணப்படுகிறது. ஒன்றாக சேர்ந்து அவர்கள், "உலகத்தைக் கலக்குகிறவர்களானார்கள்" (காண்க நடபடிகள் 17:6; KJV).

## *பன்னிருவருக்குக் கட்டளை கொடுத்தல் (10:5-15)*

***[5]இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும்,***

***[6]காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்.***

***[7]போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.***

***[8]வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.***

***[9]உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது.***

***[10]வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடி வைக்க வேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்.***

***[11]எந்தப் பட்டணத்திலாவது கிராமத்திலாவது நீங்கள் பிரவேசிக்கும்போது, அதிலே பாத்திரமானவன் யாரென்று விசாரித்து, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்.***

***[12]ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அதை வாழ்த்துங்கள்.***

***[13]அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள் மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது.***

***[14]எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்.***

***[15]நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

இயேசு தமது அப்போஸ்தலர்களை அழைத்துக் கட்டளையிட்டதைப்பற்றி (10:1) அறிக்கை செய்து, அவர்களின் பெயர்களை கொடுத்த பின்பு (10:2-4), அவர்களின் வரையறைக்குட்பட்ட ஊழியத்திற்கு இயேசுவின் குறிப்பான அறிவுறுத்தல்களை மத்தேயு உள்ளடக்கினார் (10:5-15).

**வசனங்கள் 5, 6.** அப்போஸ்தலர்கள் கிளம்பிச் சென்றது பற்றியோ, அவர்களின் ஊழியப்பணி பற்றியோ அல்லது அவர்கள் திரும்பி வந்தது பற்றியோ, திட்டவட்டமான குறிப்புகள் எதுவும் தரப்படவில்லை. மத்தேயு இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால் என்று மாத்திரம் எழுதினார். “அனுப்புகையில்” என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள (*apostellō*) கிரேக்க வார்த்தை “அப்போஸ்தலர்” என்ற பெயர்ச்சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது. மாற்கு 6:7ம் வசனம், அப்போஸ்தலர்கள் “இருவர் இருவராக”

*அனுப்பப் பட்டனர் என்று சுட்டிக்காண்பிக்கிறது. "கட்டளையிட்டு" என்று தரவழைக்கப்பட்ட (parangellō) வினைச்சொல், புதிய ஏற்பாட்டில் முப்பதுக்கும் அதிகமான முறைகள் காணப்படுகிறது மற்றும் இது பல்வேறு வகைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு இராணுவச் சொற்றொடராக, சட்டரீதியான சொற்றொடராக, ஒழுக்கரீதியான சொற்றொடராக, மருத்துவரீதியான சொற்றொடராக மற்றும் தர அளவை அல்லது நுட்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கடமைக்குக் கட்டுப்பட்டு இருத்தல் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. கட்டளையிடப்பட்ட நபர் கீழ்ப்படிதலுடன் இருக்கும்படி அறைகூவல் விடப்பட்டார்.*

*இயேசு* ***நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்*** *என்று பன்னிருவருக்குக் கட்டளையிட்டார். இந்தக் கட்டுப்பாடு சுவிசேஷப் புத்தகங்களில் வேறு எவ்விடத்திலும் திரும்பக் கூறப்படவில்லை. இது எழுபது பேருக்குக்கூட தேவைப்படவில்லை. இயேசு தமது அப்போஸ்தலர்களை, "தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் ... அனுப்பினார்" (லூக்கா 10:1). அப்போஸ்தலர்கள் மீது அவர் வைத்த கட்டுப்பாடு, அவர் தமது சொந்த ஊழியத்தை விவரிக்கும் வகைக்குப் பொருத்தமாயிற்று. அவர், "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல" என்று கூறினார் (15:24). இந்த ஒப்புவமை, தேவனுடைய மக்களை மலைகளின் மீது சிதறி அலையும் ஆடுகளாகச் சித்தரித்தது (காண்க ஏசாயா 53:6; எரேமியா 50:6; எசேக்கியேல் 34:11-16; 1 பேதுரு 2:25). ராபர்ட் H. மவுன்ஸ், "இந்த மறுகூட்டுதலை, மேசியாவின் காலத்தினுடைய உதயம்" என்பதாகக் கண்டார்.[13]*

*இயேசுவின் வழிகாட்டுதல்கள், யூத மக்களிடம் மாத்திரம் செல்லும்படி பன்னிருவரைக் கட்டுப் படுத்திற்று. வில்லியம் பார்க்ளே அவர்கள், "அவர்கள் வடக்கே சீரியாவுக்குச் செல்ல இயலாதிருந்தனர், அல்லது கிழக்கில் அவர்கள் பெருமளவு புறஜாதிப் பகுதியாக இருந்த தெக்கப்போலிக்கும்கூடப் போக இயலாதிருந்தனர்" என்று குறிப்பிட்டார்.[14] மேலும் அவர்கள், தெற்கே, "சமாரியாவின் எந்த நகருக்குள்ளும் நுழைதலில்" இருந்தும் தடை செய்யப்பட்டிருந்தனர். "பன்னிருவரின் முதல் பயணத்தை கலிலேயாவிற்குள் மட்டுப்படுத்துதல் என்பதே ... இந்தக் கட்டளையின் செயல்விளைவாக இருந்தது."[15] 10:23ல் இயேசு, அவர்கள் இஸ்ரவேலின் பட்டணங்களுக்குச் "செல்வார்கள் என்றார், இது கலிலேயாவைக் காட்டிலும் சற்று அதிகமான பகுதிகளை உள்ளடக்கும்."*

*அப்போஸ்தலர்கள் மீது இந்த வரையறைகள் வைக்கப்பட்டது ஏன்? பல பதில்கள் தரப்பட முடியும்: (1) யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையிலும், யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும்[16] இடையிலும் நிலவிய முன்தப்பெண்ணங்கள் மிகவும் பெரிதாயிருந்தது. எல்லா மக்களுக்கும் இரட்சிப்பைக் கொண்டுவருதல் என்பதே இயேசுவின் ஊழியமாயிருந்தது என்பதை ஒருவர் நினைவில் வைக்க வேண்டும். நிறைவாக அவர் தமது சீஷர்களை "சகல ஜாதிகளிடத்திற்கும்" மற்றும் "சர்வ சிருஷ்டிக்கும்" அனுப்பினார் (28:19; மாற்கு 16:15). (2) வரவிருந்த*

இராஜ்யத்திற்கு யூதர்கள் அதிகம் ஆயத்தமாக இருந்தனர். "அறுவடைக்குத் தயாராக இருந்த விளைச்சலின் பகுதிக்கு மாத்திரம் வேலையாட்களை அனுப்புதல்" மிகச்சிறந்ததாக இருந்தது.[17] (3) அப்போஸ்தலர்களின் நேரம் எல்லைக்கு உட்பட்டதாக இருந்தது; இந்த வேளையில் அவர்கள் இஸ்ரவேல் நாட்டின் எல்லா நகரங்களிலும்கூட ஊழியம் செய்து முடிக்க இயலாதிருந்தனர். (4) இரட்சிப்பு "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்" (ரோமர் 1:16) ஏற்பட வேண்டியதாக இருந்தது. சுவிசேஷத்தை முதலில் யூதர்கள் கேள்விப்படும் வாய்ப்பைக் கொண்டிராத வரையில் அது புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்கப்படாததாக இருக்க வேண்டியதாயிற்று (நடபடிகள் 10).

***வசனம் 7.*** அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் ஊழியம் மாத்திரமல்ல, ஆனால் அவர்கள் தர வேண்டிய செய்தியும் கொடுக்கப்பட்டது. அவர்கள் **பிரசங்கிக்கப்** போகையில், அவர்கள் **பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது** என்று மக்களிடம் கூறவேண்டி இருந்தது. இது அவர்களின் மையச் செய்தியாக இருக்கையில், இது அர்த்தப்படுத்தியது என்பதை அவர்கள் விபரமாக விளக்க வேண்டி இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இது யோவானும் இயேசுவும் பிரசங்கித்திருந்த அதே செய்தியாக இருக்க வேண்டியது அவசியமாகும் (3:2; 4:17 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). இராஜ்யம் "சமீபித்து இருந்தது" என்று கூறுதல், அது இன்னும் வரவில்லை, ஆனால் விரைவாக நெருங்கிக் கொண்டிருந்தது என்று அர்த்தப்படுத்திற்று. இந்த அறிவிப்பிற்கு ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்பு, இராஜ்யம் இயேசுவின் தீர்க்கதரிசனத்தின்படி - வல்லமையுடன் - வந்தது (மாற்கு 9:1; நடபடிகள் 1:8; 2:1-4, 29-36). இராஜ்யம் இன்னும் வரவில்லை என்றோ அல்லது அது தொலைவான எதிர்காலத்தில் வருகிறது என்றோ ஒருவர் கூறுதலானது, புதிய ஏற்பாட்டின் அதிகாரம் மிக்க போதனைகளை மறுத்தலாக உள்ளது (1 கொரிந்தியர் 15:24, 25; கொலோசெயர் 1:13; எபிரெயர் 12:28; வெளிப்படுத்தின விசேஷம் 1:9; காண்க 6:10ன் மீதான விளக்கங்கள்).

***வசனம் 8.*** அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்க வேண்டியது மாத்திரமின்றி, சுவிசேஷத்தின் பரிவிரக்கத்தைக் காண்பிக்கும் வகையில் அவர்கள் அற்புதங்களை நிகழ்த்த வேண்டியும் தங்கள் உண்மைத்தன்மைக்கு உறுதிப்பாட்டை அளிக்க வேண்டியும் இருந்தது; அவர்கள் **வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணி, மரித்தோரை எழுப்பி, பிசாசுகளைத் துரத்துவார்கள்.** இயேசு ஏற்கனவே வியாதியுள்ளவர்களைக் குணமாக்கி இருந்தார் (4:23, 24; 8:5-16; 9:1-8, 20-22, 27-31, 35), மரித்தோரை எழுப்பியிருந்தார் (9:18-26), ஒரு தொழுநோயாளியைச் சுத்தமாக்கியிருந்தார் (8:1-4) மற்றும் பிசாசுகளைத் துரத்தி இருந்தார் (4:24; 8:16, 28-34; 9:32-34). அப்போஸ்தலர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பார்கள்.

இந்த அற்புதங்கள், அப்போஸ்தலர்களின் செய்தியை உறுதிப்படுத்தும் அடையாளங்களாகப் பயன்படும் (மாற்கு 16:17, 18; எபிரெயர் 2:3, 4). அவைகள் அவர்களின் வல்லமையைச் செயல்விளக்கப்படுத்தும் நோக்கத்திற்காக மாத்திரம் நிகழ்த்தப்படுபவையாக இருக்காது. மாறாக, அவர்களுடைய அந்த செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே நிகழ்த்தப்பட்டது. பன்னிருவரும் - பிற்பாடு எழுபது பேரும் - வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் பிசாசுகளைத்

துரத்தவும் கூடியவர்களாக இருந்தனர் என்பது மற்ற சுவிசேஷ விபரங்களில் இருந்து தெளிவாகிறது (மாற்கு 6:12, 13; லூக்கா 9:6; 10:17). மற்றும் நடபடிகள் புத்தகம், அப்போஸ்தலர்கள் மரித்தோரில் இருந்து உயிரோடு எழுப்பும் இரு உதாரணங்களைப் பதிவு செய்துள்ளது (நடபடிகள் 9:36-43; 20:9-12).

இயேசு தமது அப்போஸ்தலர்களிடத்தில், **இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்** என்று கூறினார். அவர்கள் எவ்வித செலவும் இன்றி அற்புத வல்லமையைப் பெற்றுக்கொண்டனர். அது இலவசமாகப் பொழியப்பட்டது, மற்றும் அவர்கள் அது தேவைப்படுபவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டியிருந்தனர். வஞ்சிப்பவர்கள் பெரிய வல்லமைகளைக் கொண்டிருப்பதாக நடித்தனர், மற்றும் அவர்கள் சொந்த ஆதாயத்திற்காகத் தங்கள் வஞ்சனைகளைப் பயன்படுத்தினர் (காண்க 7:15-23). மந்திரவாதி சீமோன் மற்றும் எலிமா (பர்யேசு) (நடபடிகள் 8:9-13, 18-24; 13:6-12) ஆகியோர் இப்படிப்பட்ட மனிதர்களாக இருந்தனர். சுவிசேஷ ஊழியர்கள் தாங்கள் பெற்றுக்கொள்ளும் உதவிக்குப் பாத்திரராக இருக்கின்றனர் (10:10; 1 கொரிந்தியர் 9:8-14), ஆனால் அவர்கள் தங்கள் ஊழியங்களை விற்கக் கூடாது. மூப்பர்களாக ஊழியம் செய்யும் மனிதர்கள் "பணஆசையில்லாத"வர்களாக இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 3:3) மற்றும் அவர்கள் "இழிவான ஆதாயத்தை இச்சியாத"வர்களாக இருக்க வேண்டும் (தீத்து 1:7; காண்க 1 பேதுரு 5:2).

***வசனங்கள் 9, 10.*** அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்திற்குப் பணம் வசூல் செய்யக்கூடாதிருந்தது அல்லது அவர்கள் தங்கள் சொந்த செலவுக்காகப் பணம் சேர்த்து வைக்கவும் கூடாதிருந்தது இயேசு, **உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது ... தேடி வைக்கவேண்டாம்** என்று கூறினார். இந்த சந்தர்ப்பப்பொருளில், "பொன்," "வெள்ளி" மற்றும் "செம்பு" என்பவை வெவ்வேறு வகையான நாணயங்களைக் குறிக்கின்றன; பொன் என்பது மிகவும் அதிகமான மதிப்பு உடையதாகவும், செம்பு என்பது மிகவும் குறைவான மதிப்பு உடையதாகவும் உள்ளது. "கச்சை" என்பது "பணத்தை இடையில் கட்டும் பட்டை ஒன்றில் செருகிவைத்துச் செல்லும் பழங்காலப் பழக்கத்தை" சுட்டிக்காண்பிக்கிறது.[18]

அப்போஸ்தலர்கள் தங்கள் **பயணத்திற்காகப் பையை** எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டனர். "பை" என்பதற்கான (*pēra*) வார்த்தை, பிச்சைக்காரர்கள், தாங்கள் பெறும் தர்மப்பணத்தை வைத்துக்கொள்ளும் வகையைக் குறிக்கக் கூடும். இயேசு ஏற்கனவே கச்சையைப் பற்றிக் குறிப்பிட்டு இருந்ததால், அவர் இங்கு பொதுவாக உணவு சுமந்து செல்லப்பயன்படும் சாக்குப்பையைக் குறிப்பிட்டு இருக்கலாம்.[19] மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களின்படி, பன்னிருவர் தங்களுடன் அப்பத்தையோ அல்லது பணத்தையோ எடுத்துச் செல்லக் கூடாதிருந்தது (மாற்கு 6:8; லூக்கா 9:3). அவர்கள் அப்போது, உணவையோ அல்லது உணவை வாங்கப் பணத்தையோ எடுத்துச் செல்லக் கூடாதிருந்தது. அவர்கள் தேவன்மீதும் மற்றவர்களின் தாராளகுணத்தின் மீதும் முழுமையும் சார்ந்திருக்க வேண்டியிருந்தது.[20]

இயேசு அவர்களிடம், **இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது** எடுத்துச் செல்ல வேண்டாம் என்று கூறினார், இது இந்த ஊழியத்தின் தற்காலிக இயல்பைக்

காண்பிக்கிறது. "அங்கிகள்" என்பதற்கான (*chitōn*) வார்த்தை "மேற்சட்டைகள்" அல்லது "சட்டைகள்" என்று இன்னும் சிறப்பாக (NRSV) மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம் (5:40ன் மீதான விளக்கங்களைக் காணவும்). அவர்கள் மிதியடிகளே அணியாமல் வெறுங்கால்களுடன் செல்ல வேண்டும் என்று இயேசு கூறினாரா? இதற்கு நேர்மாறாக மாற்கு 6:9ம் வசனம், அவர்கள் "பாதரட்சைகளை" அணிந்து செல்ல வேண்டும் என்று கூறுகிறது. மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் பயன்படுத்திய வார்த்தைகள் வேறுபட்டவையாக உள்ளன. மத்தேயுவின் *hupodēma* சொற்றொடர் "முழுக்காலணிகளை" "shoes," குறிக்கிறது மாற்குவின் *sandalion* சொற்றொடர் "மிதியடிகளை" குறிக்கிறது என்று சிலர் கூறுகின்றனர்.[21] இருந்தபோதிலும், அவர்கள் கூடுதல் துணிகளோ அல்லது காலணிகளோ எடுத்துச் செல்லக்கூடாது, ஆனால் தங்கள் முதுகுகளிலும் தங்கள் பாதங்களிலும் தாங்கள் கொண்டுள்ளவற்றை மாத்திரம் அணிந்து கொள்ள வேண்டும் என்பதே இங்கு கருத்தாக உள்ளது. மேலும் இயேசு, ஒரே ஒரு தடியை மாத்திரம் எடுத்துச் செல்லும்படி அவர்களுக்குக் கூறினார் (மாற்கு 6:8). தடியானது பாதுகாப்பிற்காகவும் நடப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டது; இயேசு அவர்களைப் பாதுகாப்பற்றவர்களாக அனுப்பிவைக்கவில்லை, மிதியடிகளும் தடியும் பயணத்திற்கு அடிப்படையில் அத்தியாவசியமானவையாக இருந்தன (யாத்திராகமம் 12:11).

இயேசு துறவற வாழ்வுநடையை ஆதரித்துக் கெண்டிருக்கவில்லை; மாறாக, சீஷர்கள் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் என்றே அவர் போதித்துக்கொண்டிருந்தார்.[22] பிற்பாடு, பிரதான கட்டளைக்கான தயாரிப்பில், இந்தத் தடைகள் கர்த்தரால் நீக்கப்பட்டன (லூக்கா 22:35, 36).

இந்த அறிவுறுத்தல்களைக் கொடுத்த பின்பு இயேசு, **வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்** என்று விளக்கப்படுத்தினார். ஆகாரத்திற்கு என்பது ஆங்கிலத்தில் "support," என்று (*trophē*) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் தமிழ் வேதாகமத்தில் இது மிகவும் நேரடியாகவும் சரியாகவும் "ஆகாரத்திற்கு" (ASV; NKJV; NRSV). என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தக்கூற்று லூக்கா சுவிசேஷத்திலும் காணப்படுகிறது, அங்கு இயேசு எழுபது பேரை அனுப்பினார் (லூக்கா 10:7). இருப்பினும் அங்கு "கூலி" (*misthos*) என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தை விற்கக்கூடாதிருக்கையில், அவர்கள் தாங்கள் யாருக்கு ஊழியம் செய்தனரோ அந்த மக்களால் ஆதரிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் உயிர்பிழைப்புக்குத் தேவனையும் அவருடைய மக்களையும் சார்ந்திருப்பார்கள். இந்த நிபந்தனை இன்னமும் அமுலில் உள்ளது, ஏனெனில் கர்த்தருடைய சபைகளுக்குப் பவுல் இதே கட்டளையைக் கொடுத்தார் (1 கொரிந்தியர் 9:8-14; கலாத்தியர் 6:6). முதல் நூற்றாண்டில் சுவிசேஷ ஊழியர்கள் மாத்திரமல்ல, ஆனால் "முழுநேரமும்" ஊழியம் செய்த மூப்பர்களும்கூட "இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக" எண்ணப்பட்டனர்; அவர்கள் "[தங்கள்] கூலிக்குப் பாத்திரராயிருந்தனர்" (1 தீமோத்தேயு 5:17, 18).

**வசனம் 11. எந்தப் பட்டணத்திலாவது கிராமத்திலாவது** என்பதற்கான குறிப்பு, "சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து" போதித்தல்

மற்றும் குணமாக்குதல் ஆகியவற்றைச் செய்த இயேசுவின் ஊழியத்தை நினைவுக்குக் கொண்டு வருகிறது (9:35). அப்போஸ்தலர்கள் தங்கள் பிரசங்க ஊழியத்தில் இந்த இடங்களுக்குச் செல்லுகையில், அவர்கள் அங்கிருந்த பிரபலமான மக்களுடன் தங்குதலை நாட வேண்டியிருந்தது. **பாத்திரமானவன்** (*axios*), என்ற பெயர் உரிச்சொல் 10ம் வசனத்திலும் காணப்படுகிறது, அதில் இது பொருத்தமான அல்லது பெறத்தகுதியான ஒருவர் என்பதைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட தனிநபர்கள், உபசரிப்புத்தன்மை உடையவர்களாகவும் அப்போஸ்தலர்களின் செய்திகளை ஏற்றுக்கொள்பவர்களாகவும் - அதாவது உயர்வான ஒழுக்கமும் ஆவிக்குரிய பண்பும் உடையவர்களாக - இருப்பார்கள். ஒழுக்கவீனத்தில் பிரபலமான நபர்களுடன் தங்குதல் என்பது அவர்களின் ஊழியத்திற்கு இடர்ப்பாட்டை ஏற்படுத்தக்கூடும்.

பாத்திரரான நபர் ஒருவரை அவர்கள் கண்டவுடன், **அவரது வீட்டில்** அவர்கள் **அந்த நகரில்** இருக்கும்வரை தங்கி இருக்க வேண்டும், மிகச்சிறந்த இடங்களைக் கண்ணோக்குவதற்குப் பதிலாக - "வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்" (லூக்கா 10:7) - அவர்கள் (கிடைக்கும் இடத்தில்) மனதிருப்தி கொண்டிருக்க வேண்டும். இது விருந்தளிப்பருக்குப் பட்சம் காண்பிக்கும் விஷயமாக இருந்தது.

இலவச உபசரிப்பு என்பது காலம் மற்றும் கலாச்சாரத்திற்கு நியாயமற்ற எதிர்பார்ப்பாக இருக்காது.[23] கிறிஸ்தவ உபசரிப்பு என்பது புதிய ஏற்பாடு முழுவதிலும் கட்டளையிடப்பட்டும் விவரிக்கப்பட்டும் உள்ளது (ரோமர் 12:13; 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8; எபிரெயர் 13:2; 1 பேதுரு 4:9; 3 யோவான் 5-8).[24]

**வசனங்கள் 12, 13. வீட்டுக்குள்** பிரவேசிக்கும்போது அப்போஸ்தலர் கூற வேண்டியது என்ன என்பதைக் கூட இயேசு அறிவுறுத்தினார். இவ்விஷயத்தில் சுட்டுச்சொல் குறிப்பிடத் தக்கதாக உள்ளது. விவரிக்கப்பட்ட "*அந்த* வீட்டிற்கு" அவர்கள் **வாழ்த்து** தெரிவிக்க வேண்டும். *ஷாலேம்* அல்லது "உனக்குச் சமாதானம்" என்பது யூதர்களின் பாரம்பரிய வாழ்த்தாக இருந்தது (காண்க நியாயாதிபதிகள் 19:20; 1 சாமுவேல் 25:6; சங்கீதம் 122:7, 8; யோவான் 20:19, 21, 26). பலத்த இந்தச் சொற்றொடர், "சமாதானம்," "நலமாயிருத்தல்," "ஆரோக்கியம்" மற்றும் "வளமை" ஆகியவற்றைக் குறித்தது. JNT வேதாகமம் இவ்வசனங்களைப் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: "நீங்கள் யாரெனும் ஒருவருடைய வீட்டிற்குள் நுழையும்போது, '*ஷாலேம் அலேய்க்கும்* [உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக]' என்று கூறுங்கள். அந்த வீடு பாத்திரமானதாக இருந்தால், உங்கள் *சமாதானம்* அங்கு தங்கியிருக்கும்; இல்லையென்றால் உங்கள் *சமாதானம்* உங்களிடத்திற்கே திரும்பி வரும்." இயேசு இரு மாறுபட்ட சூழ்நிலைகளைக் கண்ணோக்கினார், அவற்றில் ஒன்றில் அப்போஸ்தலர்கள், **வீட்டை பாத்திரமானது** என்று முடிவுசெய்வார்கள் மற்றும் இன்னொன்றில் அவர்கள் அந்த வீட்டை பற்றித் தவறாக முடிவு செய்வார்கள் (அது **அபாத்திரமானதாக இருக்கும்**). முதலாவது காட்சியில் அவர்கள் கூறிய **சமாதானம்** அங்கு தங்கியிருக்கும். இரண்டாவது காட்சியில் அவர்கள் அதைத் **திரும்பப் பெறுவார்கள்.**

**வசனம் 14.** அப்போஸ்தலர்கள் ஒரு **வீட்டில்** அல்லது ஒரு **நகரத்தில்** புறக்கணிக்கப்படுதலைச் சந்திக்கும்போதெல்லாம், அவர்கள் தங்கள் கால்

*களில் படிந்த* **தூசியை உதறிப்போட வேண்டியிருந்தது.** *டேவிட் ஹில் அவர்கள், "அந்த வீடு அல்லது நகரத்துடன் உள்ள தொடர்பின் தடயம் எதுவும் இருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்.*[25] *அந்தச் செயல் தன்னிலேயே, "புறதெய்வ வணக்கத்தாரின்" மண் என்று கருதப்பட்ட வேண்டிய ஒன்றின்மீது நிற்குதல் என்பதைக் கூறும் ஒரு வழிமுறையாக இருந்தது.*[26] *யூதர்கள், புறஜாதியாரின் பகுதியொன்றைக் கடந்து தங்கள் சொந்த இடத்திற்குத் திரும்பும்போது, அந்த இடத்தை அசுத்தமான தூசியினால் தீட்டுப்படுத்தி விடுவோமோ என்ற பயத்தினால், தங்கள் கால்களில் இருக்கும் தூசியை உதறிப்போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் (காண்க ஆமோஸ் 7:17).*[27] *பவுலும் பர்னபாவும், பிசிதியாவின் அந்தியோகியாவில் இருந்த யூதர்களால் புறக்கணிக்கப்பட்டபோது, அவர்கள் தங்கள் கால்களில் இருந்த தூசியை உதறிப்போட்டனர் (நடபடிகள் 13:50, 51). கொரிந்துவில் இருந்த யூதர்கள் பவுலை "எதிர்த்துநின்று தூஷித்தபோது" அவர் "உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதி யாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே" சொன்னார் (நடபடிகள் 18:6). தற்போதய நிகழ்வில் அப்போஸ்தலர்களின் அடையாளத்துவச் செயலானது "அவர்களுக்குச் சாட்சியாக" வும் செயல்படும் (மாற்கு 6:11).*

**வசனம் 15.** *இயேசு,* **நியாயாத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு** *- இது அவரது அப்போஸ்தலர்களைப் பிறக்கணிக்கும் எந்தப் பட்டணத்திற்கும் என்று அர்த்தப்படுகிறது -* **நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்** *என்று சொன்னார் (11:20-24 ன்மீதான விளக்கங்களைக் காணவும்). "இலகுவாயிருக்கும்" என்பது, "இயேசுவைப் புறக்கணிக்கும் நரகங்களின்மீது நிச்சயமாகவே வரவிருக்கும் பயம்நிறைந்த ஆக்கினைத்தீர்ப்பை விளக்கப்படுத்த" அவர் பயன்படுத்திய ஒரு சொற்றொடராக உள்ளது.*[28] *சோதோம் கொமோரா என்பவை தேவனால் அழிக்கப்பட்ட "பழமொழிக்காளான துன்மார்க்கத்தின் நகரங்களாக" இருந்தன.*[29]

*வாய்ப்பு என்பது பொறுப்பு என்பற்குச் சமானமாக உள்ளது என்பதே இயேசுவின் கூற்றில் முதன்மைக் கருத்தாக இருக்கிறது (காண்க லூக்கா 12:48). இயேசுவின் நாட்களில் நகரங்கள், விசுவாசிப்பதற்கும் மனந்திரும்புவதற்கும், சோதோம் மற்றும் கொமோராவைக் காட்டிலும் அதிகமான வாய்ப்பைக் கொண்டிருந்தன; ஆகையால் அவற்றிற்கு நியாயத்தீர்ப்பானது மிகவும் கண்டிப்பானதாக இருக்கும். மற்றவர்களைக் காட்டிலும் சிலருக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அதிகம் சகிக்கக்கூடியதாக இருப்பது எப்படி? இயேசு பிரசங்கித்த சுவிசேஷத்தைப் புறக்கணித்தவர்கள், பழைய ஏற்பாட்டின் துன்மார்க்கமான நகரங்களைக் காட்டிலும் அதிகம் பெரிதான வாய்ப்பைக் கொண்டிருந்தனர். அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த நகரங்கள் மற்றும் கிராமங்களைக் காட்டிலும் சோதோம் மற்றும் கொமோரா ஆகியவை குறைந்த அளவே துன்மார்க்கமானவையாக இருந்தன என்பது ஏன்? அறியாமை என்பதே காரணமாக இருக்க வேண்டும். இயேசுவின் நாட்களில் இருந்த நகரங்கள் இயேசுவின் ஊழியம் என்ற மாபெரும் வெளிச்சத்திற்கு எதிராகப் பாவம் செய்தன.*[30]

## *பன்னிருவருக்கு எச்சரிக்கை (10:16-23)*

***16**ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.*

***17**மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆயலங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்.*

***18**அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள்.*

***19**அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும் போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்.*

***20**பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.*

***21**சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள்.*

***22**என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.*

***23**ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்; மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களையெல்லாம் சுற்றிமுடியாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

இயேசுவின் ஊழியத்தொடக்கத்தில், இருந்தே, அவரை மக்கள் எதிர்த்து நின்றனர். அவர் தமது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிடுகையில், அவர்களும் அதேபோன்றே வெறுப்பை எதிர்கொள்வார்கள் என்று அவர்களை அவர் எச்சரித்தார். 16 முதல் 23 வரையிலான வசனங்கள், அவர்கள் எதிர்கொள்ளவிருந்த உபத்திரவத்தை, அவர்களுக்குத் தரப்படும் வழிகாட்டுதலை மற்றும் வெறுப்புக்கொண்ட நகரத்தில் தங்கி இருத்தலுக்குப் பதிலாக அங்கிருந்த அவர்கள் ஓடிப்போக வேண்டும் என்பதை விவரித்தன.

**வசனம் 16.** இயேசு, **ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்** என்று கூறினார். "ஆடுகள்" என்பவை மிகவும் சார்ந்து வாழும் மிருகங்களாக உள்ளன. இயல்பான தற்காப்புகள் எதுவும் பெற்றிராத அவைகள் உதவியற்றவைகளாக, சுலபமாகப் பயப்படுபவையாக உள்ளன. அவற்றிற்கு மிகமோசமான எதிரிகளாக பலஸ்தீன நாட்டில் "ஓநாய்கள்" இருந்தன. இங்கு இயேசு மிருகங்களைப் பற்றிப் பேசவில்லை, ஆனால் அவற்றை இயேசு, சிலவேளைகளில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பதன் விவரிப்புகளுக்குப் பயன்படுத்தினார். அவருடைய அப்போஸ்தலர்கள் ஆடுகளாக இருந்தார் மற்றும் அவர்களின் விரோதிகள் ஓநாய்களாக இருந்தனர். வில்க்கின்ஸ் அவர்கள் "இயேசு

உவமையை முற்றிலுமாகத் திருப்பினார். இதற்கு முன் இந்த சீஷர்கள் ஆடுகளிடத்தில் செல்ல வேண்டி இருந்தது (9:36; 10:6), ஆனால் இப்போது அவர்கள் தாங்களே ஓநாய்கள் மத்தியில் செல்லும் ஆடுகளாக இருந்தனர்" என்று சுட்டிக்காண்பித்தார்.[31] இரையுண்ணும் மிருகங்களின் உலகத்திற்குப் பன்னிருவரும் அனுப்பப்பட்டனர் (காண்க 7:15; யோவான் 10:10, 12; நடபடிகள் 20:29). அவர்கள் கிறிஸ்துவின் ஒவ்வொரு விரோதியாலும் இரையாக உண்ணும்படி தேடப்படுவார்கள்.

இது உண்மையாக இருந்ததால் இயேசு, **சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும்** [ஞானமுள்ளவர்களும்; CEV] **புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்** என்று அவர்களுக்குப் புத்திகூறினார். ஒருவேளை இந்த மொழிநடை பழமொழிரீதியானதாக இருந்தது எனலாம். ரபீத்துவ இலக்கியத்தில் இதேபோன்ற ஒரு கூற்று தேவனுடைய பண்பைக் குறிப்பதாக உள்ளது. இஸ்ரவேல் மக்களைப் பற்றிக்கூறும்போது அவர், "என்னிடத்தில் அவர்கள் புறாக்களைப் போலக் கபடற்றவர்களாக இருக்கின்றனர், ஆனால் மக்களினங்களிடத்தில் அவர்கள் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாக இருக்கின்றனர்" என்று கூறினார்.[32] புறாக்கள் என்பவை, சாத்தியக்கூறான வகையில், நோவாவின் காலத்தில் இருந்தே, சமாதானம், கள்ளங்கபடின்மை மற்றும் தூய்மை ஆகியவற்றின் அடையாளமாக இருந்துள்ளன. அவைகள் தற்பாதுகாப்பற்ற உயிரிகளாகவும் கொன்று தின்னிகளுக்குச் சுலபமாக இரையாகக் கூடியவையாகவும் இருக்கின்றன. "சர்ப்பங்கள்" என்பவை தொடக்க காலத்தில் இருந்தே, அவற்றின் தந்திரம் மற்றும் ஞானம் ஆகியவற்றினால் அறியப்பட்டுள்ளன (காண்க ஆதியாகமம் 3:1); அவற்றில் பல, விஷமுள்ளவையாகவும் மிகவும் அபாயமானவையாகவும் உள்ளன. "சர்ப்பங்களின் பண்பாகப் பழமொழி ரீதியாகக் குறிப்பிடப்பட்ட யாவும் இயேசுவின் சீஷர்களுக்குத் தேவைப்படுகிறது, ஆனால் வஞ்சனை நிறைந்த தந்திரமும் சூழ்ச்சித்திறமிக்க ஏமாற்றும் குணமும், புறாக்களின் பண்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள துன்பம் இழைக்காத தன்மை மற்றும் சாந்தகுணம் ஆகியவற்றால் இடம் மாற்றப்பட வேண்டியவையாக உள்ளது."[33]

அப்போஸ்தலர்கள் இராணுவத்தின் கண்டிப்புக் கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்று இருக்கும் அதே வேளையில், மற்ற மனிதர்களுடன் பழகும் விதத்தில் ஞானத்தைச் செயல் படுத்த வேண்டியவர்களாகவும் இருந்தனர். அவர்கள், நிச்சயமாகவே வரும் எதிர்ப்பைப் பற்றி விழிப்புணர்வு கொண்டவர்களாக இருக்க வேண்டும், மற்றும் அவர்கள் அதைக் கையாளுவதில், கட்டுவிக்கும் வகையில் நடக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். தேவனுடைய இராஜ்யமானது உலகப் பிரகாரமான யுத்தத்தின் பட்டயத்தினால் அல்ல, ஆனால் "தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தால்" (எபேசியர் 6:17; காண்க மத்தேயு 26:51-54; யோவான் 18:36; எபிரேயர் 4:12) பரப்பப்பட வேண்டியதாக இருந்தது.

பல்வேறு குழுவினர் அப்போஸ்தலர்களின் விரோதிகளாக ஆவார்கள். வித்தியாசப்பட்ட மூன்று பகுதிகளில் இருந்து எதிர்ப்பு வரும்: மதரீதியான நிறுவனம் (10:17), குடிமை அதிகாரிகள் (10:18) மற்றும் குடும்ப உறுப்பினர்கள் (10:21).

***வசனம் 17.*** *முதலாவது, மதரீதியான நிறுவனத்தில் இருந்து எதிர்ப்பு வரும். இயேசு,* ***மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்*** *என்று எச்சரித்தார். மத்தேயு சுவிசேஷத்தில் "ஆலோசனைச் சங்கங்கள்" என்று குறிப்பிடப்பட்டவை குடிமை நீதிமன்றங்களாக இருக்கவில்லை. இந்த வேளையில் பன்னிருவரும் யூதர்களின் நகரங்களுக்கு மாத்திரம் சென்றனர். இஸ்ரவேல் நாடு தேவனால் தேவத்துவ வகையில் ஆளப்பட்டது; மோசேயின் மூலம் அவர்களுக்குத் தரப்பட்ட நியாயப்பிரமாணமே அவர்களின் சட்டமாக இருந்தது. விஷயம் இப்படி இருந்ததால், மதரீதியான அதிகாரிகளே குடிமை விஷயங்களிலும் நியாயந்தீர்த்தனர். "ஆலோசனைச் சங்கங்கள்"* (*sunedrion*) *என்ற சொற்றொடர், இருபத்து மூன்று உறுப்பினர்களைக் கொண்ட யூத ஆலோசனை சங்கங்களாக* (sanhedrins) *இருந்தன, இருப்பினும் இந்த நியாயாதிபதிகளில் மூவர் மாத்திரமே ஒரு முடிவை எடுப்பதற்குத் தேவைப்பட்டிருந்தனர்.*[34] *வில்க்கின்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *நியாயாதிபதிகளின் ஆலோசனை சங்கத்தின் முடிவிற்குப் பின்பு, [குற்றம் நிரூபிக்கப்பட்ட] நபர், நியாயாதிபதிக்கு முன்பாகத் தரையில் கிடத்தப்பட்டு சவுக்கினால் அடிக்கப்படுவார். நாற்பது என்பதே அடிக்கப்படும் அடிகளின் நிலையான எண்ணிக்கையாக இருந்தது, ஆனாலும் குற்றத்திற்கு ஏற்ப இந்த எண்ணிக்கை மாற்றப்படலாம். ஆனால் நாற்பது அடிகளுக்கு மேல் தரப்படக்கூடாது, ஏனெனில் நாற்பதுக்கு மேற்பட்ட அடிகள் என்பது மனிதத் தன்மையற்றதாக இருக்கும் (உபாகமம் 25:1-3). ஒருவேளை அவர்கள் எண்ணிக்கையில் தவறக்கூடும் என்பதால், கொடுக்கப்படும் அடிகள் ஒன்றுகுறைய நாற்பது என்பதே பொதுவானதாக இருந்தது* [Mishnah *Makkoth 3.2, 10; காண்க 2 கொரிந்தியர் 11:24*].[35]

*"ஜெப ஆலயங்கள்" என்பவை ஆராதனைக்குப் பயன்படுத்தப்பட்ட இல்லங்களாக மாத்திரம் இருக்கவில்லை, ஆனால் நீதி செயல்படுத்தப்படும் இடங்களாகவும் இருந்தன (காண்க 23:34).*

***வசனம் 18.*** *இரண்டாவதாக, குடிமை அதிகாரிகளிடத்தில் இருந்து எதிர்ப்பு வரும். இயேசு,* ***அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள்*** *என்று கூறினார். இந்த எச்சரிக்கை, எல்லைக்கு உட்பட்ட கட்டளைக்கு அப்பாலும் விரிவாக்கப்பட்டது, இது பிரதான கட்டளை தரப்பட்ட (28:18-20) பின்பு தொடக்ககால சபையில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகளை முதன்மையாகக் குறிப்பிடுவதாக இருந்தது. புறஜாதி ஆளுநர்களை எதிர்கொள்ளுதல் என்பது அரசியல் சூழ்நிலை காரணமாகத் தவிர்க்க இயலாததாக இருந்தது. ரோமாபுரியானது யூதர்களுக்கு அவர்களின் சொந்த மார்க்கம் பற்றிய சட்ட விஷயங்களில் கணிசமான அளவு சாய்வைக் கொடுத்திருந்தது, அவர்கள் சாவுக்கினமான அதிலும் விசேஷமாக, மரண தண்டனை விஷயங்களில் ஆளுகை செய்ய அனுமதிக்கப்படவில்லை (1:19; 12:14ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இந்தக் கட்டுப்பாட்டை*

*யூதர்கள் அடிக்கடி மீறியபோதிலும், அவர்கள் அந்த சட்டத்தின்கீழ் ஆளுகை செய்யப்பட்டிருந்தனர்.*[36] *நடபடிகள் புத்தகத்தில், யூதர்களினால் தரப்பட்ட உபத்திரவமானது, பேலிக்ஸ் மற்றும் பெஸ்து என்ற பெயர்கொண்ட ரோம "ஆளுநர்களுக்கு" முன்பாகப் பவுல் விசாரணை செய்யப்படுதலுக்கு வழிநடத்திற்று (நடபடிகள் 24; 25). மேலும் அவர் அகிரிப்பா அரசருக்கு முன்பாகவும் காணப்பட்டார் (நடபடிகள் 25:23). இப்படிப்பட்ட விசாரணைகள், கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுக்கும் வாய்ப்பைத் தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு அளித்தன.*

*தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு எதிரான உபத்திரவங்கள் முதலில் யூதர்களிடமிருந்து வந்திருக்கையில், அது பிற்பாடு பெரும்பாலும் ரோம அரசிடமிருந்து வந்தது. கி.பி. 64ல் நீரோ என்ற அரசரால் ஏற்பட்ட உபத்திரவங்கள் பற்றி டேசிட்டஸ் அவர்கள், கிறிஸ்தவர்கள் "தங்களின் அருவருப்புகளுக்காக வெறுக்கப்பட்ட வகுப்பினராக" இருந்தனர், விசேஷமாக அவர்களின் "மனிதகுலத்திற்கு எதிரான வெறுப்பிற்காக" வெறுக்கப்பட்ட வகுப்பினராக இருந்தனர் என்று எழுதினார்.*[37] *அவர்கள்மீது சாட்டப்பட்ட பொய்க்குற்றச்சாட்டிற்குக் கெடுமதியான சிந்தைகள் சில காரணமாக இருந்தன. அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தை உண்டு, அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுவதாகப் பேசியதால், அவர்கள் மனிதமாமிசம் உண்பவர்கள் (agapē) என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் அன்பின் விருந்துகளில் ஈடுபட்டதால், ஒழுக்கவீனமானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவர்களின் பிரசங்கியார்கள். உலகமானது அக்கினிப் பெருக்கத்தினால் முடிவடைவதாகச் சித்தரித்ததால், அவர்கள் மீது "நெருப்புமூட்டுதல்" என்ற குற்றம் சாட்டப்பட்டது. அவர்கள் இராயனைத் தங்கள் ஆண்டவன் என்று ஏற்றுக்கொள்வதற்கான எந்த ஒரு வாக்குறுதியையும் அளிக்க மறுத்தபடியால், இராஜ விசுவாசம் இல்லாத குடிமக்கள் என்று குற்றம்சாட்டப்பட்டனர். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் அடிப்படையற்றவையும் தகுதியற்றவையுமாகவே இருந்தன, ஆனால் அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட உபத்திரவங்களில் அதிகமானவற்றிற்கு, அவர்கள் எதை விசுவாசித்தார்களோ அல்லது ஒருவேளை எதனால் நீதிமான்களாக்கப் பட்டிருந்தார்களோ, அதுவே காரணமாக இருந்தது.*

**வசனங்கள் 19, 20.** இவ்வசனங்களில் உள்ள வாக்குத்தத்தங்கள், கிறிஸ்தவ யுகத்திற்கு அல்ல ஆனால் அப்போஸ்தலர்களுக்கே ஏற்படுத்தப்பட்டன. அவர்கள் பல்வேறு நியாயஸ்தலங்களுக்குக் கூட்டிச் செல்லப்பட்டபோது, தங்களுக்கு எதிராகச் சாட்டப்படும் குற்றச் சாட்டுகள் பற்றி, **எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும்** [அவர்கள்] **கவலைப்படத் தேவையற்றிருந்தது. இயேசு, நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்** என்று வாக்களித்தார். இது சுவிசேஷ விபரங்களில் பரிசுத்த ஆவியானவரிடத்தில் இருந்து வரும் உதவி பற்றிய முதல் வாக்குத்தத்தமாக இருந்தது (காண்க மாற்கு 13:11; லூக்கா 21:14, 15; யோவான் 14:15-17, 26; 15:26, 27; 16:13-15). இம்மனிதர்கள் தங்கள் தற்காப்புக்கென்று கொடுக்க வேண்டியிருந்த பதில்களுக்கு **ஆவியானவரால்** ஏவப்படுவார்கள். ஜேம்ஸ் பர்ட்டன் காஃப்மென் அவர்கள், இவ்வசனத்தை, "சகல சத்தியத்திற்குள்ளும் அப்போஸ்தலர்களை வழிநடத்திய ஏவுதல் பற்றிப் புதிய

ஏற்பாட்டில் உள்ள மிகப்பலமான வசனங்களில் ஒன்று" என்று குறிப்பிட்டார்.[38]

**வசனம் 21.** மூன்றாவது, எதிர்ப்பு ஒருவரின் சொந்தக் குடும்பத்தில் இருந்தே வரும். **சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள்.** இந்த எச்சரிக்கை இயல்பில் பொதுவானதாகக் காணப்படுகிறது, மற்றும் அப்போஸ்தலர்கள் தங்கள் சொந்தக் குடும்பங்களினால் தவறாக நடத்தப்பட்டதற்கான சாட்சியம் குறைவுபடுகிறது. இருப்பினும் இப்படிப்பட்ட குடும்ப எதிர்ப்பு என்பது கிறிஸ்துவைப் பின்பற்றும் யாவருக்கும் வலிவான அச்சுறுத்தலாக உள்ளது.

சில ரபீக்கள், "மேசியா வரும்போது உள்ள தலைமுறையில், இளைய மனிதர்கள் முதியவர்களை அவமானப்படுத்துவார்கள், ... மகள்கள் தங்கள் தாய்மார்களுக்கு எதிராக எழும்புவார்கள், மற்றும் மருமகள்கள் தங்கள் மாமிகளுக்கு எதிராக எழும்புவார்கள்" என்று போதித்தனர்.[39] இந்த சந்தர்ப்பப் பொருளில், குடும்ப உறுப்பினர்கள், விசுவாசிக்கும் தங்கள் உறவினர்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படிக்கு, அதிகாரிகளுக்கு "காட்டிக் கொடுப்பார்கள்" (*paradidōmi*) அல்லது "கையளிப்பார்கள்" (காண்க 10:17).

மக்களை ஒன்றாகக் கூடிவரச் செய்தல் என்பதே கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய நோக்கமாக இருக்கையில், சுவிசேஷத்தை மக்கள் புறக்கணித்தல் என்பது குடும்பங்களின் மத்தியிலும்கூடப் பிரிவினையை ஏற்படுத்துவதே விளைவாக இருக்கும். இயேசுவும்கூடப் பின்வருமாறு போதித்தார்:

> நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் (லூக்கா 12:51-53; காண்க மத்தேயு 10:35, 36).

**வசனம் 22.** இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, **என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்** என்று கூறினார். இந்த விஷயத்தில் "எல்லாராலும்" என்பது நேரடியாக விளக்கப்படுத்தப் படக்கூடாது. இது உயர்வுநவிற்சி அணியின் உதாரணமாக உள்ளது மற்றும் இது, மக்களின் எல்லா வகையினரையும், மக்களினங்களையும் ம ற்றும் வகுப்பினரையும் உள்ளடக்கக் கூடும். "என் நாமத்தினிமித்தம்" அல்லது "என் நாமத்திற்காக" என்பது, கிறிஸ்துவினிமித்தமாக (யோவான் 15:18-25) அல்லது அவரது நாமத்தை - அதாவது "கிறிஸ்தவர்" என்ற நாமத்தை அவர்கள் கொண்டிருந்ததால் (1 பேதுரு 4:14-16) அவ்வாறு வெறுக்கப்படுவார்கள் என்று அர்த்தப்படக் கூடும். வில்க்கின்ஸ் அவர்கள், "என் நாமத்தினிமித்தம்" என்பது "கிறிஸ்துவியலான முக்கியமான சொல்விளக்கமாக உள்ளது" (இ.வ. 5:11; 24:9) இது இஸ்ரவேல் மக்களின் ஆராதனை மற்றும் பற்றுறுதி ஆகியவற்றின்

*முழுக்கவனக் குவிப்பாக இருந்த, தேவனுடைய நபர்த்துவத்தின் பிரதி நிதித்துவமான வகையில் "தேவனுடைய நாமத்தின் பழைய ஏற்பாட்டுத் தனிச்சிறப்பிற்குத் திரும்பிச் செல்கிறது (உதாரணமாக யாத்திராகமம் 3:15; 6:3; 9:16; 20:7)" என்று குறிப்பிட்டார்.*[40]

*உலகத்தில் அவரைப் பின்பற்றுபவர்கள் எதிர்கொள்ளும் மகிழ்வற்ற சூழ்நிலைகள் இருந்தாலும், இயேசு ஊக்கமூட்டும் வாக்குத்தத்தம் ஒன்றை ஏற்படுத்தினார்:* **முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.** *"முடிவு" என்பதற்கான (telos) கிரேக்க வார்த்தை, முடிவின் காலம் பற்றிய பாதுகாப்பற்ற யூகங்களுக்கு வழிநடத்தியுள்ளது. இந்தக் கூற்று முதன்மையாக அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் குறிப்பாக இருந்தால், முடிவுக்காலம் என்பது இயேசு அர்த்தப்படுத்தியதாக இருப்பது எவ்வாறு? எல்லாக்காலங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் இதை நாம் நடைமுறைப்படுத்தினாலும், இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் முடிவுக்காலம் வரையில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று அது அர்த்தப்படுமா? நிச்சயமாகவே இல்லை! Telos என்பதற்கு இவ்விடத்தில் சுட்டுச்சொல் ஒன்றும் இல்லை. இது "முடிவுக் காலத்தை" குறிப்பிடுவதில்லை (காண்க 24:13; 1 கொரிந்தியர் 13:7; வெளிப்படுத்தின விசேஷம் 3:11).*[41] *இது "அவர்களின் ஊழியத்தினுடைய முடிவு வரையிலும்" என்று அர்த்தப்படக்கூடும், ஆனால் இது "வாழ்வின் முடிவு வரையிலும்" என்பதையே அதிகமாகக் குறிப்பிட வாய்ப்புள்ளது*[42] *(காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:10).*

**வசனம் 23.** *இயேசு தொடர்ந்து,* **ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்** *என்று கூறினார். இந்தக் கூற்றின் சந்தர்ப்பப் பொருளில் இது, இன்னும் அப்போஸ்தலர்களின் ஊழியத்திற்கான குறிப்பையே கொண்டுள்ளது. அவர்கள் ஒரு நகரத்தில் நன்கு வரவேற்கப்படவில்லை என்றால், அவர்கள் "தங்கள் கால்களின் தூசியை உதறிப்போட" வேண்டும் என்று ஏற்கனவே அவர்களுக்குக் கூறப்பட்டிருந்தது (10:14). ஒரு குறிப்பிட்ட நகரத்தில் அவர்கள் பகையுணர்வுள்ள எண்ணப்போக்கையும் செயல்களையும் சந்தித்தால், அவர்கள் அங்கு தங்கியிருந்து சூழ்நிலையைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்றே அவர் கூறினார் என்றாக வேண்டும்; அதற்குப் பதிலாக அவர்கள் விரைவாகவும் அமைதியாகவும் வேறு நகருக்குக் கடந்து செல்ல வேண்டும். சபை நிலைநாட்டப் பட்டபின்பு, பவுல் தமது ஊழியப் பிரயாணங்களில் இந்த நடைமுறையைப் பின்பற்றினார் (நடபடிகள் 14:1-7; 17:1-10).*

*தொடர்ந்து இயேசு,* **மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களையெல்லாம் சுற்றிமுடியாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** *என்று கூறினார். "மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக" என்ற சொற்றொடர் இதன் அர்த்தம் பற்றி நமக்கு மாபெரும் அறைகூவல் விடுக்கிறது. ஐந்து சாத்தியக்கூறுகள் கவனிக்கத் தக்கதாக உள்ளன:*

*(1) இந்தச் சொற்றொடர், அப்போஸ்தலர்கள் இந்த நகரங்களுக்குச் சென்றபின்பு விரைவிலேயே இயேசு அவ்விடங்களுக்குச் செல்ல இருந்ததைக் குறிப்பிடலாம் (11:1; காண்க லூக்கா 10:1). ஒருவேளை இது மிகவும் எளிய மற்றும் மிகவும் சாத்தியக்கூறான விளக்கமாக உள்ளது எனலாம்.*

*(2) இன்னொரு கண்ணோக்கு தானியேல் 7:13, 14ஐக் கொண்டு*

தொடங்குகிறது, இது "மனுஷகுமாரனின்" வருகை பற்றிக் குறிப்பிடும் வேதவசனப் பகுதிகளில் முதலாவது வசனப்பகுதியாக உள்ளது. இந்தக் காட்சி, கிறிஸ்து முடிசூட்டப்படுதலை தீர்க்கதரிசனமாகக் குறிப்பிடுகிறது. ஆகையால், தானியேல் 7:13, 14 வசனப்பகுதியானது இயேசுவின் இந்தக் கூற்றை விளக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டால், அவர் பெந்தெகொஸ்தே நாளன்று அவரது இராஜ்யத்திற்குள் தமது வருகையைச் சுட்டிக் காண்பித்திருக்க வேண்டும் (16:28; நடபடிகள் 2:36). இது சரியான விளக்கமாக இருந்தால், நமது கர்த்தர் ஓரிரு ஆண்டுகளில் வரவிருந்த காலத்தைக் குறிப்பிட்டார் என்றாக வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு, "இப்போதும் பிற்பாடும் நமது ஊழியத்தில் நீங்கள் எல்லா நகரங்களுக்கும் சென்றிருக்கையில், மனுஷ குமாரன் தமது இராஜ்யத்துடன் வருவார்" என்று கூறினார்.

(3) இயேசு, கி.பி. 70ல் ரோம ராணுவத்தினால் எருசலேம் அழிக்கப்பட்டபோது, இஸ்ரவேலுக்கு எதிரான நியாயத்தீர்ப்பில் தமது வருகையை மறைமுகமாக உணர்த்தி இருக்கலாம். இருப்பினும், இது அவரது அர்த்தமாக இருந்தது என்றால், அவர் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பு நடைபெற இருந்த ஒரு நிகழ்வைக் குறிப்பிட்டார் என்றாகிறது. இந்தக் கண்ணோட்டம் இயேசு மறைமுகமாக உணர்த்திய காலக்கோட்டிற்கு ஊறு விளைவிப்பதாகக் காணப்படுகிறது.

(4) நான்காவது கண்ணோக்கு ஒன்றும்கூட, தானியேல் 7:13, 14ஐ அடிப்படையாகக் கொண்டுள்ளது, இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நடைமுறைப்படுத்தும் சொற்றொடராக உள்ளது. மீண்டுமாக இந்தக் கண்ணோக்கு இயேசு அறிவித்த காலக்கோட்டில் இருந்து மிகவும் விலக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

(5) இயேசு இந்த பூமியின் மீது ஆளுகை செய்ய மறுபடியும் வரவிருந்ததைக் குறிப்பிட்டார் என்ற இந்தச் சொற்றொடர் பற்றிய கண்ணோட்டமானது தவறான முயற்சியாக உள்ளது என்பது தெளிவு. இந்தக் கண்ணோக்கின்படி, அப்போஸ்தலர்கள் எல்லா நகரங்களுக்கும் செல்வதற்குள், மனுஷகுமாரன் இந்த நகரங்கள் மீது ஆளுகை செய்ய வருவார் என்றாகிறது. முதலாவது, புதிய ஏற்பாடானது எந்த இடத்திலும் இயேசு இந்த பூமியின்மீது ஆளுகை செய்ய வருவார் என்று சித்தரிப்பதில்லை. இரண்டாவது, அவர் மறுபடியும் வரும்போது, இரட்சிக்கப்பட்டவர்களைத் தம்முடன் பரலோகத்தில் வாழும்படி அழைத்துச் செல்வார் (காண்க யோவான் 18:36; 1 தெசலோனிக்கேயர் 4:16-18).

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

# வரையறைக்குட்பட்ட கட்டளை (அதிகாரம் 10)

பின்வரும் பிரிவுகளுடன் இந்த அதிகாரம் முழுவதற்குமான பாடம் ஒன்றைத் தயாரிக்க முடியும்: (1) இயேசு அப்போஸ்தலர்களை அழைத்தல் (10:1-4); (2) இயேசு அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிடுதல் (10:5-15); (3) இயேசு அப்போஸ்தலர்களை எச்சரித்தல் (10:16-23) மற்றும் (4) இயேசு அப்போஸ்தலர்களுக்குப் போதித்தல் (10:24-42).

டேவிட் ஸ்டீவர்ட்

## *இயேசுவின் ஊழியத்தினுடைய விரிவாக்கங்கள் (10:1-8)*

*அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினால் தனிப்பட்ட வகையில் அழைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டனர். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் இதே பண்புகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. இருப்பினும் நாம் சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டுள்ளோம், மற்றும் நாம் ஆவியானவரால் ஏவப்பட்டுள்ள வசனத்தைக் கொண்டுள்ளோம். மேலும், பிரதான கட்டளை நமக்கு இன்றும் உள்ளது (28:18-20). அப்போஸ்தலர்களைப் போன்று நாமும் இயேசுவின் ஊழியத்தின் விரிவாக்கங்களாக இருக்கிறோம். "நாம் அவரது கரங்களாகவும் கால்களாகவும்" இருக்கிறோம் என்று கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் ஊழியம் இந்த உலகத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், அது அவரது சீஷர்கள் செய்வதாகவே இருக்கும்.*

டேவிட் ஸ்டீவர்ட்

## *இயேசுவின் அப்போஸ்தலர்கள் (10:2-4)*

*தொடக்கத்தில் இயேசு, தமது தனிப்பட்ட தூதர்களாக இருக்கும்படி பன்னிரண்டு மனிதர்களைத் தேர்ந்துகொண்டார் (மாற்கு 3:13-15; லூக்கா 6:12, 13). இவர்கள் அவரது ஊழியம் முழுவதிலும் - அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது முதல் அவர் பரத்துக்கேறும் வரையிலும் - அவருடன் இருந்தனர் மற்றும் உயிர்த்தெழுதலுக்கும் அவர்கள் சாட்சிகளாகச் செயல்பட்டனர் (நடபடிகள் 1:21, 22; 2:32). இயேசுவைக் காட்டிக்கொடுத்துவிட்டு தனது உயிரை மாய்த்துக்கொண்ட யூதாஸுக்குப் பதிலாக மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டார் (நடபடிகள் 1:15-26). பிற்பாடு பவுல் ஒரு அப்போஸ்தலராக இயேசுவினால் தேர்ந்துகொள்ளப்பட்டார் (நடபடிகள் 9:1-22; 1 கொரிந்தியர் 15:1-11; 2 கொரிந்தியர் 11:5). பதினான்கு மனிதர்களே குறிப்பாக கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாக இருந்துள்ளனர்.*

*இருப்பினும் "அப்போஸ்தலர்" என்ற சொற்றொடர் மாறுபட்ட கருத்தில், புதிய ஏற்பாட்டில் மற்ற தனிநபர்களை விவரிக்கவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இயேசு தாமே, ஊழியத்திற்கு அனுப்பப்பட்டவருக்குப் பிரதான உதாரணமாக இருப்பதாக "அப்போஸ்தலர்" என்று அழைக்கப் பட்டுள்ளார் (எபிரெயர் 3:1). கர்த்தருடைய சகோதரரான யாக்கோபு, உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியமாக இருந்தார் (1 கொரிந்தியர் 15:7) மற்றும் அவர் எருசலேமில் இருந்த சபையில் தனிச்சிறப்பான நடத்துவத்துவம் ஒன்றைக் கொண்டிருந்தார் (நடபடிகள் 15:13-21; 21:17, 18; கலாத்தியர் 2:9). அவர் "அப்போஸ்தலர்களில்" ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார் (கலாத்தியர் 1:19). பர்னபா இன்னொரு உதாரணமாக இருக்கிறார்; அவரும் பவுலும் "அப்போஸ்தலர்கள்" என்று ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் (நடபடிகள் 14:4, 14). இம்மனிதர்கள் அந்தியோகியாவில் இருந்த சபையாரால், பரிசுத்த ஆவியானவர் குறித்தபடி பிரசங்கிக்கும் ஊழியத்திற்குத் தேர்ந்துகொள்ளப்பட்டு அனுப்பப் பட்டனர் (நடபடிகள் 13:1-3). மற்றவர்களும் குறிப்பிட்ட ஊழியத்திற்காக உள்ளூர்*

*சபைக்குழுமத்தினால் கட்டளை பெற்ற காரணத்தினால் "அப்போஸ்தலர்கள்" அல்லது "தூதுவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (2 கொரிந்தியர் 8:23; பிலிப்பியர் 2:25; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2:6).*

## பேதுரு (10:2-4)

*கர்த்தருடைய அப்போஸ்தலர்களின் பட்டியலில் எப்போதுமே பேதுரு முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளதால், அவர் பிரதான அப்போஸ்தலர் என்றும் "சபையின் தலைவர்" என்றும் கூடச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்தத் தவறான கருத்து, மத்தேயு 16:18, 19ல் பேதுருவிடம் இயேசுவின் கூற்றின் அடிப்படையிலும் ஏற்படுத்தப்படுகிறது. ரோமன் கத்தோலிக்க சபையார், பேதுரு முதல் போப்பாக இருந்தார் என்றுகூட உரிமை கோருகின்றனர். பேதுரு தமக்கு இப்படிப்பட்ட உரிமைகோருதலை ஒருக்காலும் ஏற்படுத்தியதில்லை. புறஜாதியாருடன் உண்ணுதலில் பேதுருவின் மாய்மாலத்திற்காக அவரைப் பவுல் கடிந்துகொண்டார் (கலாத்தியர் 2:11-14), இருப்பினும் பிற்பாடு பேதுரு, பவுலின் ஆழ்ந்த அறிவிற்காக அவரைப் பாராட்டினார் (2 பேதுரு 3:15, 16). இத்துடன் கூடுதலாக, பேதுரு தம்மைப் பற்றி "உடன் மூப்பர்" என்று தாழ்மையாக விவரித்தார் (1 பேதுரு 5:1). தொடக்ககாலக் கிறிஸ்துவின் சபையில் "போப்" என்ற ஒருவர் ஒருக்காலும் இருந்ததில்லை, மற்றும் கிறிஸ்து ஒருவரே தமது சபைக்குத் தலைவராக இருக்கிறார் (எபேசியர் 1:22, 23; 5:23; கொலோசெயர் 1:18).*

## "உன்னதத்தில் இருந்து வல்லமை" (10:8)

*இயேசுவுக்குச் சாட்சிகளாக இருப்பதற்காக அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து வல்லமையைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அவர்களுக்கு இயேசு வாக்களித்தார் (நடபடிகள் 1:8; காண்க லூக்கா 24:49). பரிசுத்த ஆவியானவரின் பல்வேறு கொடைகளை மற்றவர்களுக்கு அளிக்கும் வல்லமை என்பது அவர்கள் பெற்றுக்கொண்ட வல்லமைகள் அல்லது "கொடைகளில்" ஒன்றாக இருந்தது (1 கொரிந்தியர் 12:4-11). நடபடிகள் புத்தகத்தின் தொடக்க அதிகாரங்களில், அப்போஸ்தலர்கள் மாத்திரமே இதைச் செய்ய முடிந்தது என்பது தெளிவாகக் காணப்படுகிறது (நடபடிகள் 8:14, 15).*

*பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட நிகழ்வானது இருமுறை மாத்திரமே நடைபெற்றது (நடபடிகள் 2; 10) என்பதால், இந்த வரங்கள் அப்போஸ்தலர்களால் தரப்படுதல் என்பது மாத்திரமே, பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களை மற்றவர்கள் பெற்றுக்கொள்ளும் ஒரே வழியாக இருந்தது. இது ஜெபத்துடனும் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்தலுடனும் தொடர்புடையதாக நடைபெற்றது.*

*பவுல் தமது மனமாற்றத்திற்குப் பின்பு (நடபடிகள் 9), அற்புத வரங்களைப் பெற்றார் மற்றும் அவற்றைப் பிறருக்கு அளிக்கும் வல்லமையையும் பெற்றார். அப்போஸ்தலர் என்ற வகையில் அவர் தமது கரங்களைப் புதிதாக மனமாறியவர்கள் மீது வைத்து, அவர்களை ஆவியானவரின் வரங்களினால் பலப்படுத்த முடிந்தது (நடபடிகள் 19:6; ரோமர் 1:11; 2 தீமோத்தேயு 1:6). கிறிஸ்தவருக்கு வரம் தரப்பட்டவுடன் அவர் ஜெபத்தின் மூலமாகக் கூடுதல்*

வரங்களைக் கேட்க முடிந்ததாகக் காணப்படுகிறது. கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் "மேலான வரங்களை" விசேஷமாக "தீர்க்கதரிசனம் உரைக்கும் வரத்தை" நாட வேண்டும் என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 12:31; 14:1). பாஷைகளில் பேசியவர்களை அவற்றிற்கு "[நீங்கள்) விளக்கம் தரும்படி ஜெபியுங்கள்" என்று அவர் ஊக்குவித்தார் (1 கொரிந்தியர் 14:13).

கடைசி அப்போஸ்தலர் இறந்தபோது, வரங்களைக் கொடுக்கும் வல்லமையும் அவருடன் ஒழிந்து போயிற்று. அப்போஸ்தலர் கைகளை வைத்தவர்களில் கடைசியான நபர் இறந்தபோது பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களும் அவருடனே ஒழிந்து போயிற்று.

## "பழுவற்ற பயணம்" (10:9, 10)

10:9, 10ல் உள்ள குறிப்பான கட்டுப்பாடுகள், வரையறைக்குட்பட்ட கட்டளை தரப்பட்ட அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே உரியவையாக இருக்கையில், அவைகள், கர்த்தருடைய பிரதான கட்டளையை நிறைவேற்ற நாம் முயற்சி செய்கையில் நமக்கு, குறைந்த பட்சம் முக்கியமான இரண்டு பாடங்களை அளிக்கின்றன.முதலாவது, அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தில் தங்களுக்குத் தேவையானவற்றிற்குத் தேவனை நம்பியிருக்க வேண்டியிருந்தது போன்றே, இன்றைய நாட்களில் நம்மை அவர் பராமரிப்பார் என்று நாமும் நம்பியிருக்க வேண்டும். இரண்டாவது, பொருள்களை உடைமையாகக் கொண்டிருத்தல் என்பது உலக சுவிசேஷ ஊழியத்தில் நமது ஊழியப்பணிக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடும். ஹேர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> "இலகுவான பயணம்" என்பதே, எவ்வகையிலும் 9-10 வசனங்களின் மையச் செய்தியாக உள்ளது. இது, நவீன திறவுகோல் ஒன்றிற்குள் மாற்றப்படும்போது, கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் எளிமையாக, அதிக பொருள்கொண்டிருப்பதில் இருந்து விடுதலையாகி வாழ வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறது. இது தொலைதூர இடங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக வீட்டையும் நாட்டையும் விட்டுச் செல்பவர்களுக்கும் தங்கள் சொந்த நாட்டில் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புபவர்களுக்கும் உண்மையாக உள்ளது. சுவிசேஷத்தின் வழியில், நமது அதிக சுமைகள் குறுக்கிடுவதை நாம் அனுமதிக்கக் கூடாது.[43]

டேவிட் ஸ்டீவர்ட்

## பிரசங்கியார்களை ஆதரித்தல் (10:10)

சுவிசேஷ ஊழியர்களின் ஊழியத்திற்காக அவர்களுக்கு உதவிசெய்தலைச் சிலர் எதிர்க்கின்றனர். இருப்பினும் இயேசு, "வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று தெளிவாகக் கூறினார் (10:10). பவுல், பிரசங்கியார்களுக்கு ஊதியம் தரவேண்டும் என்று பரிந்துரைத்தது மட்டும் இன்றி அதை அவர் கட்டளையாயும் இட்டார்: "நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?" (1 கொரிந்தியர் 9:11); "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச்சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1 கொரிந்தியர் 9:14). பிரசங்கியார்கள்

பணம் பெறுதலுக்காக மாத்திரம் ஊழியம் செய்யக்கூடாது, ஆனால் அவர்களுக்குப் போதிய அளவில் ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.

டேவிட் ஸ்டீவர்ட்

## வெகுமதி மற்றும் தண்டனையின் படிநிலைகள் (10:15)

இயேசுவின் அப்போஸ்தலர்களைப் புறக்கணித்தவர்கள் பற்றி நாம் கலந்துரையாடியபோது அவர், "நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" என்று கூறியதைக் கவனித்துள்ளோம் (10:15). "இலகுவாயிருக்கும்" என்பது தண்டனை இல்லாத நிலையை மறைமுகமாக உணர்த்துவதில்லை. அப்படிப்பட்ட ஒரு கருத்தை இயேசு குறிப்பால்கூட உணர்த்தியதில்லை. இயேசுவின் சீஷர்கள் சென்ற நகரங்களில் இருந்தவர்கள் கொண்டிருந்த அறிவையோ அல்லது வாய்ப்பையோ, சோதோம் மற்றும் கொமோரா ஆகிய நகரங்களில் இருந்தவர்கள் கொண்டிராதபடியால், அந்த நகரின் மக்கள் தேவனுடைய செய்தியைத் தாங்கள் புறக்கணித்தமைக்காக அவ்வளவு பெரிய தண்டனையைப் பெற மாட்டார்கள் என்பது மிகத்தெளிவான அர்த்தமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பெரிய வாய்ப்புக்களை கொண்டுள்ளவர்களுக்குப் பெரிய பொறுப்புகள் உள்ளன (காண்க எபிரெயர் 10:26-30). தண்டனையின் பல்வேறு படிநிலைகள் மற்ற வசனப்பகுதியிலும் காணப்படுகிறது (11:20-24; லூக்கா 12:41-48; 20:47).

புதிய ஏற்பாடு, வெகுமதியின் பல்வேறு படிநிலைகள் இருக்கும் என்றும் சுட்டிக்காண்பிக்கிறது (5:19; 6:19-21; 18:4; லூக்கா 19:17-19; 1 கொரிந்தியர் 3:12-15; 2 கொரிந்தியர் 9:6; யாக்கோபு 3:1). தேவனுடைய கிருபையினால் கிடைக்கும் இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது (எபேசியர் 2:8-10); எவரொருவரும் பரலோகத்திற்குச் செல்லும் வழியைத் தாமே ஈட்ட இயலாது (ரோமர் 6:23). இருப்பினும் இது கிறிஸ்தவர்கள் தேவனால் மதிப்பிடப்படுவார்கள் மற்றும் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வெகுமதியைப் பெறுவார்கள் என்ற உண்மையை ஒன்றுமற்றது ஆக்குவதில்லை. பவுல், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:10; காண்க ரோமர் 2:5-11; 14:10-12; 1 கொரிந்தியர் 4:5; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15). கிறிஸ்தவர்களின் செயல்களைப் பற்றிய தேவனுடைய மதிப்பீடு அவரின் வெகுமதியினுடைய தரத்தைத் தீர்மானிக்கிறது.

## எதிர்ப்பை எதிர்கொள்ளுதல் (10:16-23)

இயேசுவின் அப்போஸ்தலர்கள் மூன்று பக்கங்களில் இருந்து உபத்திரவத்தை எதிர்கொள்ளுவர் என்று இயேசு முன்னுரைத்தார்: மார்க்க நிறுவனங்களில் இருந்து, அரசாங்கத்திடமிருந்து மற்றும் தங்கள் குடும்பங்களில் இருந்து. உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்கள் இதே சக்திகளிடத்தில் இருந்து, பல்வேறு படிநிலைகளில் எதிர்ப்பை அனுபவிக்கலாம்.

*மார்க்க நிறுவனம்.* நாட்டு மார்க்கம் ஒன்றைக் கொண்டுள்ள இடங்களில் வாழும் சிலர் இப்படிப்பட்ட வெறுப்பை எதிர்கொள்ளலாம். "கிறிஸ்தவர்கள்" என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள், "கிறிஸ்தவர்கள்" என்று தங்களை அழைத்துக்கொள்ளும் மற்றவர்களை வெறுக்கவும் செய்யலாம். "கிறிஸ்தவர்கள் மாத்திரம்" ஆக இருக்கப் பிரயாசப்படுபவர்கள் அடிக்கடி எல்லாராலும் பழித்துரைக்கப்படுகின்றனர்.

*அரசாங்கம்.* மார்க்கரீதியான சுதந்தரத்தை அனுமதிக்காத பகுதிகளில் வாழ்பவர்கள், தனிப்பட்ட வகையிலும் சட்டவிரோதமாகவும் ஒன்று கூடக் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளனர்; அவர்கள், கைது செய்யப்படுதல், அடிக்கப்படுதல் மற்றும் சிறையில் அடைக்கப்படுதல் ஆகிய இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளனர். மற்ற விஷயங்களில், ஒழுக்கவீனம் மற்றும் அநீதி ஆகியவற்றிற்கு எதிராகப் பேசும் கிறிஸ்தவர்கள், அரசாங்கத்தால் எதிர்க்கப்படுகின்றனர்.

*குடும்பம்.* சிலர் கிறிஸ்தவர்களாக இருப்பதற்காகத் தங்கள் சொந்தக் குடும்ப உறுப்பினர்களால் கடிந்துகொள்ளப் பட்டுள்ளனர். ஒழுக்கரீதியான மதிப்பீடுகளிலும் முன்னுரிமைகளிலும் உள்ள வேறுபாடுகள் அடிக்கடி முரண்பாட்டிற்கு வழிநடத்துகின்றன. சில மிகையான விஷயங்களில், விசுவாசிகள் தங்கள் உறவினர்களால் கைவிடப்பட்டுள்ளனர்.

டேவிட் ஸ்டீவர்ட்

## பிரசங்கத் தயாரிப்பு (10:20)

அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து தெய்வீக ஏவுதலை இயேசு வாக்குத்தத்தம் செய்தார். மவுன்ஸ் அவர்கள், "துரதிர்ஷ்டவசமாக, இவ்வசனம் மிகப்பல பிரசங்கியார்களுக்கு, ஞாயிற்றுக்கிழமைப் பிரசங்கத்திற்குப் போதிய அளவுக்குத் தயாரிப்புச் செய்யாதிருப்பதற்குச் சாக்குப்போக்கை அளித்துள்ளது" என்று எழுதினார்.[44] இன்றைய நாட்களில் நாம், ஆவியானவரின் வரங்களைக் கொண்டிருப்பதில்லை; அதற்குப் பதிலாக நாம், தேவனால் ஏவப்பட்ட வசனத்தைப் படிக்க வேண்டும். ஜிம்மி ஆலென் அவர்கள், அர்க்கன்சாஸின் சியார்ஸியில் உள்ள ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் தமது மாணவர்களிடம், "அப்போஸ்தலர்கள் இதை ஏவுதலினால் பெற்றனர்; நாம் இதை வேர்வையினால் பெறுகிறோம்" என்று கூறுவதுண்டு.

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 262. [2]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 113. [3]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 881. [4]*காண்க* Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 145; and R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 176. [5]Michael J. Wilkins,

"Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 67. [6]*இயேசு தமது சீஷர்களுக்கு, தாம் முந்திய அதிகாரங்களில் செயல்விளக்கப்படுத்தியிருந்த "அதிகாரம்" அல்லது "வல்லமையை" கொடுத்தார் (7:28, 29; 8:9 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காண்க).* [7]*சில பழங்காலக் கையெழுத்துப் பிரதிகளில் மாற்கு 3:14ல் apostolos என்ற வார்த்தை இருப்பதில்லை.* [8]*"அப்போஸ்தலர்" என்ற சொற்றொடர், கர்த்தரால் தனிப்பட்ட வகையில் தேர்ந்துகொள்ளப்பட்டு கட்டளை இடப்பட்ட பவுலைப் பற்றி விவரிக்க அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 15:8-10). மேலும் அவ்வார்த்தை அதன் விரிவான அர்த்தத்தில், சபைக்குழுமத்தால் அனுப்பப்பட்ட ஒருவரைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது (நடபடிகள் 14:4, 14; 2 கொரிந்தியர் 8:23; பிலிப்பியர் 2:25; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2:6).* [9]*காண்க* W. F. Albright and C. S. Mann, *Matthew,* The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 117. [10]Lewis, 147.

[11]*"கீரியோத்" என்ற பெயர்கொண்ட இன்னொரு பட்டணம் மோவாப் நாட்டில் இருந்தது (எரேமியா 48:24; ஆமோஸ் 2:2).* [12]Hagner, 266; *காண்க* George Wesley Buchanan, "Judas Iscariot," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:1151-52. [13]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 92. [14]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, 2d ed., The Daily Study Bible (Philadelphia: Westminster Press, 1958), 1:373. [15]Ibid. [16]*மத்தேயு சுவிசேஷத்தில் (10:5) சமாரியர்கள் மாத்திரம் ஒருமுறை குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்தக் கலப்பான மக்கள், கி.மு. 722ல் அசீரிய அடிமைத்தனத்திற்குப் பின்பு, வெளியில் இருந்து வந்த அந்நியர்கள் இஸ்ரவேல் மக்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொண்டதால் விளைந்த மக்கள் கூட்டமாக இருந்தனர் (2 இராஜாக்கள் 17:24; காண்க நெகேமியா 13:23, 24). யூதர்களுடன் அவர்களுக்கு இருந்த போராட்டம் நாடுகடத்தப்பட்டதற்குப் பிற்பட்ட காலம் வரைக்கும் பின்செல்கிறது (எஸ்றா 4:1-24).* [17]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 89. [18]Mounce, 92. [19]*காண்க* Bauer, 811. [20]*தங்கள் சொந்தப் பிரிவினரிடத்தில் மிகவும் உபசரிப்புக் காண்பித்த எஸ்ஸென்ஸ் என்ற குழுவினரைக் கொண்டு ஒரு இணைகருத்து ஏற்படுத்தப்பட முடியும். யோசிப்பஸ் அவர்கள், "மிகத்தனிமையான பகுதிகளுக்குப் பயணம் செல்லுகையில் அவர்கள் எதையும் தங்களுடன் எடுத்துச் செல்லாவிட்டாலும் கள்வர்கள் பற்றிய அச்சத்தினிமித்தம் தங்கள் ஆயுதங்களைத் தங்களுடன் எடுத்துச் சென்றனர்" என்று அறிக்கை செய்தார்* (Josephus *Wars* 2.8.4).

[21]*காண்க* John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica: Matthew-1 Corinthians*, vol. 2, *Matthew-Mark* (Oxford: Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979), 183-85. [22]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 186. [23]France, 181. [24]*பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் உபசரிப்பு பற்றிய உதாரணங்களுக்கு, காண்க* William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 459. [25]Hill, 187. [26]Mounce, 93. [27]*காண்க* Talmud *Nedarim* 53b; *Sanhedrin* 12a. [28]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 226.

[29]*ஆதியாகமம் 13:13; 19:24, 25; யோசுவா 32:32; புலம்பல் 1:10; ஓசியா 16:46, 48, 49; மத்தேயு 11:22, 24; லூக்கா 10:12; 17:29; ரோமர் 9:29; 2 பேதுரு 2:6; யூத் 7.* [30]James Burton Coffman, *Commentary on Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 136.

[31]Wilkins, 69. [32]*Rabbah Song of Songs* 2.14.1. [33]Gerhard F. Hasel, "Dove," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:988. [34]Mishnah *Sanhedrin* 1.2. [35]Wilkins, 69. [36]*இயேசுவை விசாரணை செய்த நிகழ்வுகள், இந்தக் கொள்கை செயல்பாட்டில் இருந்தமைக்குச் சாட்சியாக உள்ளன. முதலில் அவர் எருசலேமில் சனதெரீன் சங்கத்தாரால் விசாரணை செய்யப் பட்டார், ஆனால் அவர் ஏரோதுவினாலும் விசாரணை செய்யப்பட்டார் மற்றும் ரோம ஆளுநரான பொந்தியு பிலாத்து, அவரைக் கடைசியாக விசாரணை செய்து மரணத்தீர்வை இட்டார் (லூக்கா 22:54-23:25).* [37]Tacitus *Annals* 15.44. [38]Coffman, 137. [39]Talmud *Sanhedrin* 97a. [40]Wilkins, 69.

[41]Lewis, 152. [42]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Philadelphia: N.p., 1832; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 113. [43]Hare, 112. [44]Mounce, 94.